பக்கங்கள்: 15

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 18 வெள்ளிக்கிழமை 01.03.2024 கதிர் 115

# யாழ். நகரில் வாகன நெரிசல் குறைக்கப்படுவது அவசியம்

## சர்வதேச தரத்திலான மருத்துவ விரிவாக்கத்துக்காக யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி வலியுறுத்து



சர்வதேச தரத்திலான மருத்துவ வசதிகளை யாழ். போதனா வைத்தியசாலையில் வழங்குவதற்குவாகனநெரிசலற்றயாழ். நகரம் உருவாக்கப்படவேண்டும் எனயாழ்ப்பாணபல்கலைக் கழக மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் சுரேந்திர குமார் ☞ 2

## இனி அது ரகசியம் அல்ல!

தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் மீது கொழும்பு மேல் நீதிமன்றத்தில் பொலிஸார் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தாக்கல் சச்யதிருந்த வழக்கு நேற்றுத் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. சிவாஜிலிங்கமும் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டுவிட்டார்.

தியாகி திலீபனின் நினைவு தினத்தில் அஞ்சலி செலுத்தினார் என்பதேஅவர்மீதுசுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டு. இந்தச் சம்பவம் என்னவோயாழ்ப்பாணத்தில் உள்ள கோண்டாவிலில்தான் நடந்தது, அந்தப் பகுதி யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தின் நியாயாதிக்க எல்லைக்குள்தான் வருகின்றது என்றாலும் வழக்கைக் ☞ 2

## தனியார்மயப்படுத்தலை ஆதரிக்கவே முடியாது

### பெரமுன எம்.பி. தெரிவிப்பு

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவின் தனியார்மயப்படுத்தலை ஆதரிக்க முடியாதுஎன்றுபொதுஜனபெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

பத்தரமுல்லவில் உள்ள பொதுஜன பெரமுனவின்தலைமையகத்தில்நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டுஉரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

டெலிக்கொம் நிறுவனம், ☞ 8

## தூர சேவைப் பேருந்துகளின் புறப்பாட்டிடம் தொடர்பான பிரச்சினைக்கு தீர்வு காண குழு

### ஆளுநருடனான சந்திப்பைத் தொடர்ந்து நியமனம்

யாழ். நகரத்தின் மையத்திலிருந்து நெடுந்தூரப்பயணசேவையை வழங்கும் பேருந்துகள் அனைத்தையும் கோட்டைக்கு அருகிலுள்ள புதிய பேருந்து நிலையத்திற்கு மாற்றுவது தொடர்பாக ஆராய்ந்து தீர்வுகளை முன்வைப்பதற்கானகுழு ஒன்று இன்று அமைக்கப்படும் என்று வடக்கு மாகாண ஆளுநர் பி.எம்.எஸ்.சார்ள்ஸ் அறிவித்துள்ளார்.

தனியார் மற்றும் போக்குவரத்துச் சபை ஆகிய இரு தரப்புகளின் பேருந்துகளையுமேபுதிய பேருந்து நிலையத்திற்கு மாற்றுவதுதொடர்பிலான திட்டங்கள்குறித்துஇந்தக் குழு ஆராய்ந்து புதிய வழி வகைகளைப் பரிந்துரைக்கும்.

நகரின்மத்தியிலிருந்து நீண்டதூரசேவைக்கான பேருந்துகள் வெளியேற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்று வரும்நிலையில்,தனியார் பேருந்து உரிமையாளர்கள்நேற்றுபோக்குவரத்துச் சபை பேருந்து நிலையத்தின் முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களைச் சந்தித்த வடக்கு மாகாண ஆளுநர், தனியார் ☞ 2

## முஷாரப்பின் எம்.பி. பதவி தப்பியது

அகில இலங்கை மக்கள் காங்கிரஸில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர் முஷாரப் முதுநபீனை நீக்கியமை சட்டபூர்வமானது அல்லவென உயர் நீதிமன்றம்அறிவித்துள்ளது.

இதனால் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பறிக்கப்படுவதிலிருந்து முஷாரப் தப்பினார்.

தன்னை அகில இலங்கை மக்கள் காங்கிரஸில்இருந்துநீக்ககட்சி எடுத்த தீர்மானத்திற்கு எதிராக நாடாளுமன்ற உறுப்பினர் முஷாரப் முதுநபீன்தாக்கல்செய்த அடிப்படைஉரிமைமனு மீதான தீர்ப்பு நேற்று அறிவிக்கப்பட்டது.

உயர் நீதிமன்ற நீதியரசர்களானபிரியந்த ஜயவர்தன, ஷிரான் குணரத்ன, அச்சல வெங்கப்புலி ஆகிய மூவரடங்கியநீதியரசர்கள் குழாத்தினால்இந்ததீர்ப்பு அறிவிக்கப்பட்டுள்ளது.

மனுதாரர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணிகளான ரொமேஷ் டி சில்வா, உதித்த இஹல ஹேவா, சட்டத்தர ணி நாமிக்நபாத்ஆகியோரும் பிரதிவாதி தரப்பு சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ சுமந்திரன், சட்டத்தரணி சுரேன் பெர்னாண்டோமற்றும்சட்டத்தரணி ஹிஜாஸ்ஹிஸ்புல்லாஹ் ஆகியோரும் வழக்காடியிருந்தனர்.

## சைபர் பாதுகாப்புச் சட்டம் இந்த ஆண்டுக்குள் வரும்

தேசிய சைபர் பாதுகாப்புச் சட்டத்தை இவ்வருடத்திற்குள் கொண்டுவர எதிர்பார்ப்பதாகவும்அதன்பின்னர் சைபர்பாதுகாப்புஅதிகார சபையை நிறுவவுள்ளதாகவும்தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு மேலும்தெரிவித்ததாவது:

'கடந்த காலத்தில் 4.73% ஆக காணப்பட்ட டிஜிட்டல் பொருளாதாரம் தற்போது 5 சதவீத வளர்ச்சியைக் கண்டிருக்கிறது.அதனால் பொருளாதாரமும் வலுவடைந்திருக்கிறது. அதனை மேலும் பலப்படுத்தும்வகையிலேயே டிஜிட்டல் பொருளாதார மாநாடு ஜூலை மாத இறுதியில்இலங்கையில் நடத்தப்படவுள்ளது. அதனூடாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட் டாளர்களை ஈர்க்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கான ☞ 8

## சபாநாயகருக்கு எதிரான சுமந்திரனின் மனு தள்ளுபடி

நிகழ்நிலை காப்பு சட்டத்தில் சபாநாயகர் கையொப்பமிட்டமையை சவாலுக்குட்படுத்தி ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தாக்கல் செய்த அடிப்படை உரிமைமனுவை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

உயர் நீதிமன்றம் வழங்கிய பரிந்துரைகளுக்கு முரணாக சபாநாயகர் நிகழ்நிலைகாப்பு சட்டத்தில் கையொப்பமிட்டுள்ளதாகதெரிவித்து தாக்கல் செய்த இந்த மனுவானது ப்ரியந்த ஜயவர்தன, ஷிரான் குணரத்ன, அச்சல வெங்கப்புலிஆகியஉயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதில் சட்டமா அதிபரும், சபாநாயகரும் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்த நிலையில், சட்டமூலம்சட்டமாக்கப்பட்டு,அதில்சபாநாயகர் கையொப்பமிட் ☞ 8

## நீதிபதிகள் மீது குற்றஞ்சாட்டியவரின் சட்டத்தரணித் தகைமை பறிப்பு

### உயர் நீதிமன்றம் அதிரடி நடவடிக்கை

நாகானந்த கொடித்துவக்குவின் சட்டத்தரணி என்கிற தொழில்முறை தகைமையை இரத்து செய்வதாகஉயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

நீதிபதிகள் சிலர் ஊழல் மிக்கவர்கள் என்பதனால்,அவர்களின் முன்னிலையில்வழக்குகளை விசாரிக்க நடவடிக்கைஎடுக்கவேண்டாமெனநாகானந்தகொடித்துவக்கு 2014ஆம் ஆண்டில்உயர்நீதிமன்றத்தில் சத்தியக்கடதாசி சமர்ப்பித்து கோரிக்கை விடுத்திருந்தார்.

குறித்தசெயற்பாட்டின் ஊடாக'தவறானநடத்தை' எனப்படும் குற்றம் இழைக்கப்பட்டுள்ளதாகத் தீர்மானித்து,நீதியரசர்கள் குழாம் நாகானந்த கொடித்துவக்குவின் சட்டத்தரணி என்கிற தொழில்முறைத் தகைமையை இரத்துசெய்ய தீர்மானித்துள்ளது.

நாகானந்த கொடித்துவக்கு சட்டத்தரணி தொழிலில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாக, உடனடியாக உரிய தரப்பினருக்கு அறிவிக்குமாறு உயர் நீதிமன்ற நீதியரசர்கள் பதிவாளருக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

## பொருளாதார நலிவடைந்தோரை வாழ வைப்பதில் அஸ்வெசும, உறமய திட்டங்களுக்கு பெரும் பங்கு

### ஜனாதிபதி தெரிவிப்பு

பொருளாதாரரீதியில் வீழ்ச்சியடைந்துள்ள இந்நாட்டு மக்களை வாழ வைப்பதில் 'அஸ்வெசும'மற்றும்'உறுமய' வேலைத் திட்டங்கள் பெரும் பங்காற்றுவதாகவும், நிவாரணம் கிடைக்க வேண்டிய அனைவருக்கும் துரிதமாக நிவாரணம் வழங்கப்படும் எனவும் ஜனாதிபதிரணில்விக்ரமசிங்க தெரிவித்தார்.

மாத்தளை,வில்கமுவ பிரதேச செயலகத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற'அஸ்வெசும' வேலைத் திட்டத்தின் அமுலாக்கம் தொடர்பில் ஆராயும்கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஆளும் தரப்பின் வேலைத்திட்டத்திற்கு நிபந்தனையற்றஆதரவளிப்பதாக வில்கமுவ கிராமஅதிகாரிகள்சங்கம் ஜனாதிபதி முன்னிலையில் அறிவித்தமையும்விசேட அம்சமாகும்.

அஸ்வெசும இரண்டாம் கட்ட விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் பணி பெப்ரவரி15 ஆரம்பமாகியதோடு நேற்று வரை 35,920 புதிய விண்ணப்பங்கள்பெறப்பட்டுள்ளன. அவற்றில் 14,537விண்ணப்பங்கள் பிரதேச செயலாளர் ஊடாகவும்,21,383விண்ணப்பங்கள் இணையத்தளத்தின் ஊடாகவும் கிடைத்துள்ளன.

இன்று வரை அஸ்வெசும இரண்டாம் கட்டத்திற்கான அதிகளவான விண்ணப்பங்கள் நுவரெலியாமாவட்டத்தில் இருந்துகிடைத்துள்ளன. அந்த எண்ணிக்கை 4,892 என்பதோடு கண்டி மாவட்டத்தில் இருந்து 4,708 விண்ணப்பங்களும் இரத்தினபுரிமாவட்டத்தில் இருந்து 2,971 விண்ணப்பங்களும் கிடைத்துள்ளன.

அம்பாறை மாவட்டத்தில் இருந்து 2,243 விண்ணப்பங்களும், கொழும்பு ☞ 2

### மைத்திரிக்கு வீடு வழங்கிய வழக்கில்

## அமைச்சரவை முடிவுக்கு எதிராக நீதிமன்றம் இடைக்காலத் தடை

முன்னாள்ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக பதவி வகித்த சந்தர்ப்பத்தில் பயன்படுத்திய, கொழும்பு பெஜட் வீதியில் அமைந்துள்ள இல்லத்தை, அவர் ஜனாதிபதி பதவியில் இருந்து விலகிய பின்னரும் பயன்படுத்த ஏதுவாக அமைச்சரவை மேற்கொண்டதீர்மானத்தைவலுவற்றதாக்கிஉயர் நீதிமன்றம்இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மற்றும்அதன்நிறைவேற்று பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்து தாக்கல் செய்த அடிப்படைஉரிமைமனுநேற்றையதினம் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்ட போதே பிரியந்த ஜயவர்தன, காமினி அமரசேகர, குமுதுனி விக்ரமசிங்க ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள்குழாமினால மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டு ஒக்டோபர் 15 ஆம் திகதி, குறித்த அமைச்சரவை தீர்மானமானது பிரதிவாதியான மைத்திரிபால சிறிசேன அமைச்சரவையில் பங்கேற்றிருந்த போதே மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், அது இயற்கை நியதிகளுக்கு எதிரான செயற்பாடு எனவும் நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள ஆவணங்கள் மற்றும் சாட்சிகளுக்கமைய தெளிவுபடுத்தப்பட்டுள்ளதாகநீதியரசர்கள்குழாம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதற்குமுன்னர்இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது,மனுமீதான ☞ 2

## இனி இது .....

கொழும்பு மேல் நீதிமன்றத்தில்தான் தாக்கல் செய்திருந்தார்கள்.

2020 வருடம் செப்டெம்பர் 15 இலங்கையால் தடைசெய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் இயக்கத்தின் அங்கத்தவரான திலீபன் எனப்படும் ராசைய்யா பார்த்தீபன் என்பவரின் 33ம் நினைவு தினத்தை நினைவுகூறுமுகமாக கோண்டாவிலைச் சேர்ந்த கோகுல வீதியில் நினைவு தீபத்தை ஏற்றி இனங்களுக்கிடைய முரண்பாட்டை தோற்றுவிக்க முயற்சித்தார் என்பதே சிவாஜிலிங்கத்தின் மீதான அந்தக் குற்றச்சாட்டு.

பெப்ரவரி 5 இந்த வழக்கு விசாரணைக்காகக் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டபோதே, குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருக்கும் குற்றப்பத்திரிகை சட்ட விரோதமானது எனவும் இவ்வழக்கினை விசாரிப்பதற்கு கொழும்பு மேல் நீதிமன்றத்திற்கு நியாயாதிக்கம் இல்லை எனவும் சிவாஜிலிங்கத்தின் சார்பில் பூர்வாங்க ஆட்சேபனை எழுப்பப்பட்டிருந்தது.

இலங்கை அரசமைப்பின் 154 ஊ (3). பிரிவின் பிரகாரம் குற்றங்கள் நடந்ததாகக் கூறப்படும் பிரதேச எல்லைக்குள் நியாயாதிக்கம் கொண்ட மாகாண நீதிமன்றத்தில் மட்டுமே மேற்குறித்த குற்றச்சாட்டுகள் விசாரிக்கப்பட வேண்டும் என்ற ஏற்பாடுகள் சுட்டிக்காட்டப்பட்டன. எனவே குற்றம் புரியப்பட்டதாகக் கூறப்படும் நியாயாதிக்க எல்லைக்குள் அமைந்திருக்காத கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இவ்வழக்கினைத் தாக்கல் செய்வதற்கும் விசாரணை செய்வதற்கும் சட்ட ஏற்பாடுகள் அமைவாக இல்லை என்றும் சட்டத்திரணியினால் சமர்ப்பணம் மேற்கொள்ளப்பட்டது.

எந்த நியாயாதிக்க எல்லைக்குள் இருந்தாலும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழான வழக்குகளில் மேல் மாகாண மேல் நீதிமன்றத்தில் குற்றச்சாட்டுப் பத்திரம் தாக்கல் செய்யமுடியும் என்று பாதுகாப்பு அமைச்சரினால் பிரகடனப்படுத்தப்பட்ட ஒழுங்குவிதி ஒன்று உள்ளது. ஆனால் அந்த விதிப்படி கூட இந்த வழக்கைத் தாக்கல் செய்ய முடியாது என்ற வாதமும் முன்வைக்கப்பட்டது.

ஏனென்றால் சட்டத்திற்கான வியாக்கியானங்கள் என்பதன் கீழ் எச்சட்டத்தின் கீழும் மேற்கொள்ளப்படும் ஒழுங்குவிதிகள் மூலச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரண்பாடாக அமையக்கூடாது என்று விதந்துரைக்கப்பட்டிருக்கிறது. இந்த வழக்கில் குறிப்பிடப்பட்ட ஒழுங்கு விதிகள் மூலச்சட்டமான பயங்கரவாத தடைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரண்பாடாக மேல் மாகாண மேல் நீதிமன்றத்தில் வழக்கை தாக்கல் செய்யும் அதிகாரத்தினை சட்டவிரோதமாக சட்டமா அதிபருக்கு கொடுத்திருக்கிறது. எனவே குறித்த ஒழுங்குவிதிகள் சட்டவலு அற்றவை என்ற வாதமும் முன்வைக்கப்பட்டது.

அத்துடன் இவ்வுலகை நீங்கிச் சென்ற சகமனிதர்களின் அல்லது உறவினர்களின் நினைவினை அனுஷ்டிப்பதை எந்தச் சட்டமும் தடைசெய்யாது என்றும் இது தனி மனித சுதந்திரத்தையும் கலாசார மரபுகளையும் சமய மற்றும் பண்பாட்டு மரபுகளையும் சிதைக்கும் ஒரு செயல். மேலும் 33 வருடங்களுக்கு முன் இறந்த அகிம்சாவழிப் போராளிகளின் நினைவுகூறும் ஒரு செயல் எவ்வாறு பயங்கரவாத செயலாக அமையும்? அது எவ்வாறு இனங்களுக்கிடைய முரண்பாட்டினை தோற்றுவிக்கக் கூடும்? என்கிற வாதங்களும் சிவாஜலிங்கம் சார்பில் நீதிமன்றில் முன்வைக்கப்பட்டன.

நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது நீதிபதிகள் தமது தீர்ப்பை அறிவித்தனர். இலங்கை அரசரமைப்பின் சட்ட ஏற்பாட்டுகளுக்கும் குற்றவியல் சட்டங்களுக்கும் அத்துடன் மாகாணங்களின் மேல் நீதிமன்ற விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் கீழும் குற்றம் நிகழ்ந்த பகுதியில் நியாயாதிக்கத்தைக் கொண்டிருக்கக்கூடிய மாகாணத்தின் மேல் நீதிமன்றத்துக்குத்தான் இத்தகைய வழக்குகளை விசாரிக்க முடியும் எனவே இவ்வழக்கினை விசாரிப்பதற்கு கொழும்பு மேல் நீதிமன்றத்துக்கு நியாயாதிக்கம் இல்லை என்று குறிப்பிட்ட கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி, மேற்குறித்த வழக்கினை நியாயாதிக்கம் உள்ள ஒரு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுமாறு சட்டமா அதிபருக்கு அறிவுறுத்தினார். அத்துடன் சிவாஜிலிங்கத்தை வழக்கிலிருந்து முற்றாக விடுதலை செய்தும் அறிவித்தார்.

நினைவேந்தல் நிகழ்வுகளில் ஈடுபடுபவர்கள் மீது வழக்குகளைத் தாக்கல்செய்து, அதுவும் கொழும்பில் வழக்குகளைத் தாக்கல் செய்து மிரட்ட முடியும் என்றும் அவர்களை கொழும்புக்கும் வடக்கு கிழக்குக்கும் இடையில் அலைக்கழிப்பதன் மூலம் நினைவேந்தலில் இருந்து புறந்தள்ள வைக்க முடியும் என்றும் பொலிஸார் போட்ட திட்டத்திற்கு விழுந்த பேரிடியாக இந்த வழக்கின் தீர்ப்பு வந்திருக்கின்றது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## யாழ். நகரில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேட்டுக்கொண்டார். குறிப்பாக தற்போது யாழ். போதனா வைத்தியசாலையின் பின்புறமாக நிறுத்தப்படும் நீண்ட தூர சேவைகளுக்கான தனியார் பேருந்துகள் அங்கிருந்து அகற்றப்படவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

கல்வி அமைச்சின் நிதியுதவியுடன் மருத்துவபீடத்திற்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் அருகிலேயே யாழ்.மாநகர சபையின் நிலத்தில் கட்டப்பட்ட எட்டுமாடிகள் கொண்ட கட்டடத்தில் சிகிச்சைகள், ஆய்வுகள் மற்றும் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இந்தப் போக்குவரத்து நெரிசல் இடையூறாக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் மருத்துவ பீடாதிபதி நேற்று யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

புதிய கட்டடத்தில் ஆய்வுகள், சேவைகள் என்பன இடம் பெறவுள்ளது. மேலும் மாணவர்களுக்கு கற்பித்தல் மற்றும் நோயாளர்களுக்கான சிகிச்சைகள் என்பனவும் முன்னெடுக்கப்படவுள்ளன. அத்துடன் மாணவர்கள், வைத்தியர்கள், தாதியர்களுக்கான நவீன மருத்துவப் பயிற்சிகளும் இங்கு வழங்கப்படவுள்ளன.

கட்டடம் கட்டிமுடிக்கப்பட்ட நிலையில் அங்கு சேவைகளைத் தொடங்குவதற்குச் நீண்ட தூர தனியார் பேருந்துகளின் தரிப்பிடம் பெரும் சவாலாக அமைந்துள்ளது. எமது புதிய கட்டடத்திற்கு முன்பாக தரித்து நிற்கும் பேருந்துகள் எமது மருத்துவ சேவைகளை முன்னெடுப்பதற்கும் குறிப்பாக நோயாளிகளின் அங்கு வருவதற்கும் தடையாக இருக்கின்றன.

மேலும், யாழ்.மாநகரசபை, மாவட்டச்செயலகம், ஆளுநர் அலுவலகம் ஆகியவற்றுடன் இணைந்து யாழ்ப்பாண ஆரோக்கிய நகரம் எனும் திட்டத்தினை உலக சுகாதார நிறுவனத்தின் உதவியுடன் செயற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தினை மேற்பார்வை செய்வதற்காக உலக சுகாதார நிறுவனத்தின் இலங்கைப் பணியாளர்களும் தென்கிழக்கு ஆசியாவில் உள்ள பணியாளர்களும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் வருகைதரவுள்ளனர். எனவே எதிர்வரும் இரண்டு வருடங்களுக்குள் யாழ்ப்பாண நகரத்தினை ஆரோக்கிய நகரமாக மாற்றுவதற்கான வேலை திட்டங்களை அவர்கள் மேற்கொள்ளவுள்ளனர்.

எதிர்காலத்தில் யாழ். நகரத்தை ஆரோக்கியமாகவும் தூய்மையாகவும் வைத்திருப்பதற்கு வாகன நெரிசல் இடையூறாகக் காணப்படுகிறது. உலக சுகாதார நிறுவனத்தினால் பரிந்துரைக்கப்பட்டுள்ள சுட்டெண்ணைக் காட்டிலும் யாழ். மாநகர சபைக்குள் இதனாலேயே அதிக விவத்துக்கள் இடம்பெறுகின்றன. எனவே இதற்கு காரணமாக உள்ள போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்தி நகரத்தை தூய்மையாக பேணுவதற்கு அனைவரும் முன்வர வேண்டும் என்றும் இதன் போது கேட்டுக் கொண்டார்.-

## பொருளாதார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டத்தில் 2,099 விண்ணப்பங்களும், மொனறாகலை மாவட்டத்தில் இருந்து 2,017 விண்ணப்பங்களும், கம்பஹா மாவட்டத்தில் இருந்து 1,887 விண்ணப்பங்களும் கிடைக்கப்பெற்றுள்ளன.

குருநாகல் மாவட்டத்தில் இருந்து இதுவரை பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 1,633 ஆகும். புத்தளம் மாவட்டத்தில் இருந்து 1,632 விண்ணப்பங்கள் மற்றும் பொலன்னறுவை மாவட்டத்தில் இருந்து 1,408 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து 1,405 விண்ணப்பங்களும், பதுளை மாவட்டத்தில் இருந்து 1,289 விண்ணப்பங்களும், களுத்துறை மாவட்டத்தில் இருந்து 1,166 விண்ணப்பங்களும் கிடைத்துள்ளன. காலி மாவட்டத்தில் இருந்து பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 981 என்பதோடு ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் இருந்து 954 விண்ணப்பங்களும், அனுராதபுரம் மாவட்டத்தில் இருந்து 782 விண்ணப்பங்களும் திருகோணமலை மாவட்டத்தில் இருந்து 687 விண்ணப்பங்களும் கிடைத்துள்ளன.

கேகாலை மாவட்டத்தில் இருந்து 570 புதிய விண்ணப்பங்களும், யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து 525 புதிய விண்ணப்பங்களும், மாத்தறை மாவட்டத்தில் இருந்து 472 விண்ணப்பங்களும் வந்துள்ளன. கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து 451 விண்ணப்பங்களும், மாத்தளை மாவட்டத்தில் இருந்து 421 விண்ணப்பங்களும், வவுனியா மாவட்டத்தில் இருந்து 389 விண்ணப்பங்களும் கிடைத்துள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து 183 புதிய விண்ணப்பங்களும், மன்னார் மாவட்டத்தில் இருந்து 155 புதிய விண்ணப்பங்களும் கிடைக்கப்பெற்றுள்ளன.

முதல் கட்டத்தின் கீழ், சுமார் 2 மில்லியன் மக்கள் ஏற்கனவே நிவாரணங்களைப் பெற்று வருகின்றனர். இரண்டாவது கட்டத்தின் கீழ், புதிய விண்ணப்பதாரர்களுடன் 2.4 மில்லியன் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதே ஆளும் தரப்பின் நோக்கமாகும்.

கடந்த ஆண்டு முதல் அஸ்வெசும திட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கை எடுத்தோம். இத்திட்டம் எவ்வாறு செயற்படுத்தப்படுகிறது என்பதை அறிய இன்று வில்கமுவவிற்கு வந்தேன். நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து, நாடு வங்குரோத்தடைந்த தருணத்தில் தான் நான் ஜனாதிபதிப் பொறுப்பை ஏற்றேன். அப்போது பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டைக் காப்பாற்ற எந்தத் தலைவரும் முன்வரவில்லை. இத்தகைய வங்குரோத்து சூழலில், மக்கள் தங்கள் தொழில்களை இழந்து, பல நெருக்கடிகளை எதிர்கொண்டனர். எனவே, நாட்டு மக்களை வாழ வைக்கும் பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டேன். அதன்படி நாட்டை பொருளாதார ரீதியாகக் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுத்தோம். அதன்பிறகு, மக்களின் வாழ்வுரிமையைப் பாதுகாக்கும் வகையில், 'அஸ்வெசும' திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்க ஏற்பாடு செய்தோம். அதன்படி அஸ்வெசும மூலம் சமுர்த்தித் திட்டத்தை விட மூன்று மடங்கு உதவிகளை மக்களுக்கு வழங்க முடிந்தது.

இதன்படி, அஸ்வெசும நிவாரணம் தேவைப்படும் அனைவரையும் கண்டறிந்து, அவர்களுக்கு உதவிகளை வழங்குவதே எமது நோக்கமாகும். கலந்துரையாடல் மூலம் பிரச்சினைகளைக் கண்டறிந்து செயற்படுவதன் மூலம் இந்த திட்டம் வெற்றியளித்துள்ளது.

நம் நாட்டில் சுமார் 16 இலட்சம் சமுர்த்திப் பயனாளிகள் இருந்தனர். ஆனால் நிவாரணப் பயனாளிகளின் எண்ணிக்கையை 24 இலட்சமாக உயர்த்த எதிர்பார்க்கிறோம். மேலும், அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். ஏப்ரல் மாதம் முதல் அவர்களுக்கு 10,000 ரூபா வழங்கப்படும். 2015ஆம் ஆண்டு நான் பிரதமராக பதவி வகித்த போது அரச ஊழியர்களின் சம்பளத்தை பத்தாயிரம் ரூபாவினால் அதிகரிக்க நடவடிக்கை எடுத்தேன். அடுத்த சம்பள உயர்வை பத்து வருடங்களில் வழங்க திட்டமிடப்பட்டிருந்தாலும் பொருளாதார நெருக்கடி காரணமாக 2024 இல் அதனை வழங்க முடிவு செய்தோம்.

நாங்கள் 'உறுமய' திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளோம். 1935 ஆம் ஆண்டு முதல் காணி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் காணி உரித்து பெற்ற அனைவருக்கும் 'உறுமய' திட்டத்தின் கீழ் முழுமையான காணி உரிமையைப் பெறுவர். சட்டப்பூர்வ உரிமை கிடைப்பதால், மக்கள் நீண்டகாலமாக சந்தித்து வந்த பிரச்சினை தீரும். உறுமய திட்டத்தின் கீழ் 20 இலட்சம் பேருக்கு நிரந்தர காணி உறுதிகள் வழங்கப்படுகின்றன. இந்த ஆண்டு இறுதிக்குள் பத்து இலட்சம் காணி உறுதிகள் வழங்கப்படும். இந்த அனைத்து வேலைத் திட்டங்களின் கீழும் மக்களுக்குப் பாதுகாப்பான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதே எமது நோக்கமாகும்.

அஸ்வெசும மற்றும் உறுமய வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில், பிரதேச செயலகங்களுக்கு அதிகளவான பணிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. மக்களுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்க நாம் நம்மை அர்ப்பணிக்க வேண்டும். இந்த திட்டத்தின் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை மாற்றியமைக்க வேண்டும். இப்போது நாட்டின் பொருளாதாரம் சாதகமான வளர்ச்சியைக் காட்டுகிறது.

எனவே, இந்த மாகாணத் தில் வருமான வழிகளை அதிகரிப்பதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக சுற்றுலாப் பிரதேசமாக இந்த மாகாணத்தை அபிவிருத்தி செய்ய முடியும். நவீன விவசாயம் மற்றும் ஏற்றுமதிக்கான பலசரக்குப் பொருள் கைத்தொழிலை மேம்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. கொக்கோ மற்றும் கோப்பித் தோட்ட அபிவிருத்திக்கு புதிய முதலீட்டாளர்களுடன் புதிய தோட்டங்களை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கேற்ப மாத்தளை மாவட்ட மக்களின் வாழ்வை மேம்படுத்த எதிர்பார்க்கிறோம் என்றார்.

## தூர சேவைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேருந்து உரிமையாளர்களின் பிரச்சினைகள் தொடர்பில் மலையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்டோருடன் கலந்துரையாடி மாலையே ஒரு தீர்வு தரப்படும் என்று அறிவித்திருந்தார்

அதன்படியே நேற்று மலை ஆளுநர் அலுவலகத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஆகியோருடன் தனியார் பேருந்து உரிமையாளர்கள் கலந்துரையாடலில் ஈடுபட்டனர். இந்தக் கூட்டத்தின் பின்னர் யாழ்ப்பாணத்திலிருந்து தூர சேவைகளில் ஈடுபடும் தனியார் பஸ் உரிமையாளர்களின் கோரிக்கைக்கு அமைய, உரிய தீர்வுகளை பெற்றுக்கொடுப்பதற்காக ஒரு குழு நாளை (இன்று) நியமிக்கப்படும் என வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய பஸ் நிலையத்திலிருந்து தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்துகள் அனைத்துமே தமது சேவையை வழங்க வேண்டும் என்பதையே தனியார் பேருந்து உரிமையாளர்கள் வலியுறுத்தி வருகின்றனர். ஆனால் போக்குவரத்துச் சபை அதற்கு இணங்க மறுத்து வருகின்றனர்.

ஆளுநரின் பணிப்புரைக்கு அமைய குறுகிய காலத்திற்குள் தங்களின் கோரிக்கைக்கான தீர்வை எதிர்பார்ப்பதாக யாழ்ப்பாணத்திலிருந்து தூர சேவைகளில் ஈடுபடும் தனியார் பஸ்களின் உரிமையாளர்கள் சங்கத்தினர் தெரிவித்தனர். அதற்கமைய, தமது போராட்டத்தைக் கைவிட்டு இன்று முதல் வழமையான சேவைகளை முன்னெடுக்க உள்ளனர் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# மக்கள் பிரதிநிதிகளும், கட்சிப் பிரமுகர்களும் மக்கள் உணர்வறிந்து செயற்படவேண்டும்

## உதுமாலெப்பை அறிவுறுத்து



(கே எ ஹமீட்)

மக்கள் பிரதிநிதிகளும், கட்சிப் பிரமுகர்களும் கட்சிக் கட்டமைப்பை செயற்படுத்தி மக்களின் காலடிக்குச் சென்று கட்சி தொடர்பான செயற்பாடுகளை முன்னெடுப்பதுடன், மக்களின் உணர்வுகளையும் அறிந்து செயல்பட வேண்டும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தேசிய அமைப்பாளரும்,முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சருமான எம்.எஸ்.உதுமாலெப்பை நிந்தவூர் 07 ஆம் கிராம சேவகர் பிரிவுக்கான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் கிளை புனரமைப்புக்கூட்டம் முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் அதிஉயர் பீட உறுப்பினர் எம்.ரீ.சப்றாஸ் தலைமையில் நடைபெற்ற போது கலந்து கொண்டு உரையாற்றியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றுகையில் -

நாம் எவ்வளவு அதிகாரங்களில் இருந்தாலும், பாரிய அபிவிருத்திப் பணிகளை செய்தாலும் மக்கள் சந்திப்புக்களை அடிக்கடி ஏற்படுத்தி நமது மக்களின் மன உணர்வுகளை அறிவதுடன், நமது கட்சி செயற்பாடுகள் பற்றியும் மக்களுக்கு கிராம மட்டத்தில் விளங்கப்படுத்த வேண்டும்.

மறைந்த பெருந் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை உருவாக்கிய கால கட்டத்தில் அவரிடம் ஆட்சி,அதிகாரங்கள்,அபிவிருத்திகள் எவையும் இருக்கவில்லை. அரசியல் ரீதியில் அச்சமற்ற சமூகமாக முஸ்லிம் சமூகத்தை உருவாக்கி கொள்கைரீதியான அரசியல் செயற்பாடுகளை முன்னெடுத்தார்.

நமது மக்கள் எல்லோரும் நாடாளுமன்றத்தில் பெருந்தலைவர் அஷ்ரப் அவர்கள் நமது சமூகம் தொடர்பான என்ன பேசியுள்ளார் என்பதை நாடாளுமன்றத்தில் இன்று என்ற நிகழ்ச்சியை ஆர்வத்துடன் கேட்டனர்.

தலைவர் அஷ்ரப் அவர்களின் சமூகம் தொடர்பான தைரியமான குரல் தான் எமது சமூகத்தின் அரசியல் விடுதலைக்கு மூலனதமாக அமைந்தது என்பது தான் யதார்த்தமாகும்.

நாம் எல்லோரும் சேர்ந்து முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை கிராம மட்டத்தில் இருந்து பலப்படுத்தும் செயற்பாடுகளில் அர்ப்பணிப்போடு செயற்பட வேண்டும்.

கட்சியையும், தலைமையையும், நமது மக்களையும் விசுவாசிக்கும் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். கட்சியை பலப்படுத்திய பின் தேர்தல் நடைபெறும் போது யார் யார் உயிருடன் இருப்போம் என்பது தெரியாத உலகில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

இறைவனை நாடியவர்கள் நாடாளுமன்றம், மாகாணசபை, உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர் ஆகலாம் என்ற நம்பிக்கையுடன் செயற்பட வேண்டும். கட்சிக் கிளைகள் புனரமைப்பு செயற்பாடுகள் நிறைவு பெற்றதும் இளைஞர் கிளைகளும், மகளிர் கிளைகளும் புனரமைப்பு செய்யப்பட்டு இளைஞர்கள் கிராம மட்டத்தில் ஒற்றிணைந்து கட்சி தொடர்பான விழிப்புணர்வு கூட்டங்களை ஏற்பாடு செய்து நாளைய தலைவர்களான இளைஞர்களுக்கு எமது கட்சி செயற்பாடுகளில் இடம் கொடுக்க வேண்டும்.

இப்போதிருந்தே எதிர்காலத்தில் எமது கட்சியை வழி நடத்தக்கூடியவர்களை இனம் கண்டு முன்னுரிமை வழங்க வேண்டும்.

எமது கட்சியின் தலைவர் அல்ஹாஜ் ரவூப் ஹக்கீம் (எம்.பி) அவர்களும் நமது கட்சியை எதிர்காலத்தில் வழி நடத்தக்கூடியவர்களை இப்போதிருந்தே அடையாளம் கண்டு நமது கட்சியை எதிர்கால சந்ததியினரிடம் ஒப்படைக்க வேண்டிய பாரிய பொறுப்பு நம் எல்லோருக்கும் உள்ளது என்பதை பல பொதுக்கூட்டங்களில் பகிரங்கமாகவே தெரிவித்து முஸ்லிம் காங்கிரஸைப் பலப்படுத்தி நாம் எல்லோரும் ஒற்றுமையாக செயற்படுவதற்கான அழைப்புக்களை விடுத்து வருகின்றோம்.

இந்த நிலைமையில் இளைஞர்களையும், மகளிர்களையும் கிராம மட்டத்தில் அணிதிரட்டி நமது கட்சியைப் பலப்படுத்தும் செயற்பாடுகளில் விசுவாசத்துடன் செயற்படுவோம் எனத் தெரிவித்தார். முஸ்லிம் காங்கிரஸ் பிரதி செயலாளர் மன்சூர் ஏ காதர், அம்பாறை மாவட்ட குழுவின் செயலாளரும், முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினருமான ஏ.சீ.சமால்டீன் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர். (05)

# பொலிஸ் அதிகாரிக்கு கௌரவமளிப்பு



2024 ஆண்டிற்கான அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபரின் வருடாந்த பொலிஸ் பரிசோதனை நிகழ்வு புதன்கிழமை காலை கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய வளாகத்தில் நடைபெற்றது.

இதன் போது அங்கு வருகை தந்த அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தமயந்த விஜய ஸ்ரீக்கு இன நல்லிணக்கம், பொதுமக்கள் தொடர்பாடல், போதைப்பொருள் ஒழிப்பு உள்ளிட்ட செயற்பாடுகளை சிறப்பாக மேற்கொண்டமைக்காக கல்முனை தலைமையக பொலிஸ் ஆலோசனை குழுவின் பொதுச் செயலாளர் எம்.ஐ.எம் ஜிப்ரி(எல்.எல்.பி) உள்ளிட்ட பொலிஸ் ஆலோசனை குழு உறுப்பினர்களால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

இதன் போது கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரீ.எச். டி .எம். எல். புத்திக கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் கல்முனை பொலிஸ் நிலையத்தின் பிரதான பொலிஸ் பரிசோதகரும் சமூக பொலிஸ் பாதுகாப்புப் பிரிவின் பொறுப்பதிகாரியுமான ஏ.எல்.ஏ. வாஹீட் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (05)

# கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தில் வருடாந்த அணிவகுப்பு மரியாதை பரிசோதனை



(பாறுக் ஷிஹான்)

2024 ஆண்டிற்கான அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபரின் வருடாந்த பொலிஸ் பரிசோதனை நிகழ்வு மற்றும் மரியாதை அணிவகுப்பு புதன்கிழமை கல்முனை உவெஸ்லி பாடசாலை மைதானம் மற்றும் பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வானது கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி .எம். எல். புத்திக மேற்பார்வையில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தமயந்த விஜய ஸ்ரீ கலந்து கொண்டு அணிவகுப்பில் ஈடுபட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களின் அணிவகுப்பு மரியாதையை பார்வையிட்டு ஏற்றுக் கொண்டார்.

மேலும் பொலிசாரால் பொது மக்களுக்கு வழங்கபடும் பொலிஸ் சேவை பிரிவு நிலையங்கள் சுற்று சூழல் பொலிஸ் உத்தியோகத்தர்களின் தங்குமிட அறைகளைப் பார்வையிட்டதுடன் பொலிஸார் பயன்படுத்தும் வாகனங்களையும் பரிசோதனை மேற்கொண்டார்.

மேலும் இந்நிகழ்வில் சவளக்கடை, சம்மாந்துறை, பெரியநீலாவணை, சாய்ந்தமருது, பொலிஸ் நிலைய பொலிஸாரும் இணைந்திருந்தமை குறிப்படத்தக்கது. இது தவிர இந்நிகழ்வில் பொலிஸ் மோப்பநாய் பிரிவும் இணைந்து கொண்டமை விசேட சிறப்பம்சமாகும். (05)

# குறிஞ்சிப்பிட்டி வடக்கு கிராம சேவர் பிரிவின் அபிவிருத்திக் குழு கூட்டம்

(கற்எம்.எச்.எம் சியாஜ்)

கற்பிட்டி குறிஞ்சிப்பிட்டி வடக்கு கிராம சேவகர் பிரிவின் நடப்பாண்டுக்கான கிராம அபிவிருத்தி குழுக் கூட்டம் குரக்கன் சேனை பொது மண்டபத்தில் நடைபெற்றது.

2024 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்டத்தின் அடிப்படையில் புத்தள மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் செயற்திட்டங்கள் தொடர்பாகக் கூட்டத்தில் தெளிவுபடுத்தப்பட்டதோடு, எதிர்வரும் காலங்களில் அமைச்சின் ஊடாக செயற்படுத்த உத்தேசித்திருக்கும் வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் கலந்துரையாடல்கள் நடைபெற்றன.

அதேவேளையில் குறிஞ்சிப்பிட்டி வடக்கு கிராம சேவகர் பிரிவில் வசிக்கும் மாணவர் பாடசாலை கல்வியில் பின்னடைவில் உள்ளனர் என்றும், அவர்கள் கல்வியைத் தடை இன்றி கற்பதற்கான திட்டம் ஒன்றைக் கிராம அபிவிருத்தி குழு ஊடாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதுடன், எண் அறிவையும் எழுத்தறிவையும் தரம் 1,2 மாணவர்களுக்கு சரியாக வழங்குவோமேயானால் மாணவர்களின் எதிர் காலம் கேள்விக்குறியாகாது என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், விவசாய அபிவிருத்தி பராமரிப்பு உத்தியோகத்தர், கற்பிட்டி பிரதேச சபையின் முன்னால் உறுப்பினர் ஏ.ஆர் பௌசான், குறிஞ்சிப்பிட்டி வடக்குகிராம சேவகர் பிரிவின் மீனவ சங்கத் தலைவர்கள், மகளீர் சங்கத் தலைவி, முதியோர் சங்கத் தலைவர், சமுர்த்தி சங்கத் தலைவர் உள்ளிட்டோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நிரந்தரத் தீர்வு நோக்கி பயணிப்பதே சிறந்தது

யாழ்ப்பாணம் நகரத்தின் மையப் பகுதியில் ஏற்படும் போக்குவரதது நெரிசல் மீண்டும் பேசு பொருளாகியுள்ளது. இந்தத் தடவை அதனை முன்வைத்துள்ளவர்கள் மருத்துவத் துறையினர். எப்படியிருந்தாலும் யாழ் நகரத்தின் போக்குவரத்து நெரில் குறைக்கப்படுவது அவசியம்; அவசரம். அதற்கான சரியான திட்டங்கள் வகுக்கப்படவேண்டியதும் அவசியம். நீண்ட காலமாகப் பேசப்பட்டுவரும் இந்த விடயத்திற்கு இன்னமும் தீர்வு காணப்படவில்லை என்பது கவனத்திற்குரியது.

யாழ். நகரத்தின் மையப் பகுதி சிறியது. பல கடைத் தொகுதிகளைக் கொண்டது. அது தவிர மிகவும் சனப் புழக்கத்தைக் கொண்ட யாழ். போதனா வைத்தியசாலை மற்றும் பேருந்து நிலையம் என்பவற்றையும் அது கொண்டி–ருக்கின்றது. நகரின் நெரிசல் அதிகரிப்புக்கு இந்த இரண்டும் மிக் முக்கியமானவை. இதனால் நகரின் மையத்திலிருந்து இந்த இரண்டு அமைப்புக்களையுமே வெளியேற்ற வேண்டும் என்கிற பரிந்துரைகள் கடந்த காலங்களில் முன்வைக்கப்பட்டு வந்தன.

அதற்கு மாறாக கடந்த 5 ஆண்டுகளில் யாழ்ப்பாணம் போதனாவைத்தியசாலை, நகரின்மையத்தில்அதுதற்போது இருக்கும் இடத்திலேயே தனது பௌதீக வளங்களை, அதாவது கட்டங்களை ஊதிப் பெருப்பித்துள்ளது. போருக்குப் பின்னரான சூழலில் பெரும் வளர்ச்சியை எட்டியுள்ள போதனா வைத்தியசாலை அதற்கேற்ற வகையில் தனது கட்டடங்களையும் அந்த வளாகத்திற்குள்ளே விரிவாக்கம் செய்துள்ளது. இதனால் நகரத்திற்குள் வந்து செல்வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

அதுபோன்றே போரின் பின்னரான காலத்தில் நகரின் மையத்திலிருந்து நீண்ட தூரச் சேவைகளை வழங்கும் பேருந்துகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. வடக்கு மாகாணத்திற்குள் மட்டுமன்றி ஏனைய 8 மாகாணங்களின் முக்கிய நகரங்களுக்கும் இப்போது யாழ் நகரிலிருந்து பேருந்து சேவைகள் வழங்கப்படுவதால் வாகனங்கள் மற்றும் அவற்றைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

இதனால் நகரின் மையப் பகுதி எப்போதும் போக்குவரத்து நெரிசல் மிக்க பகுதியாகவே காட்சி தருகின்றது. இதனை நிவர்த்திக்க இந்த இரு அமைப்புக்களையும் நகரின் மையத்திலிருந்து அப்புறப்படுத்த வேண்டும் என்கிற யோசனைகள் முன்வைக்கப்பட்டாலும், இனிமேல் அகற்ற முடியாது என்கிற அளவிற்கு ஊதிப் பெருத்துள் யாழ். போதனா வைத்தியசாலை, இப்போது தனது வசதிக்காக பேருந்து நிலையத்தை அங்கிருந்து நகர்த்துவதற்கு முயற்சிக்கின்றது.

தற்போது புதிதாக அமைக்கப்பட்டுள்ள யாழ். மருத்துவ பீடத்திற்கான 8 மாடிக் கட்டடத்தின் முன்பாக தனியார் பேருந்துகளின் நீண்ட தூர சேவைக்கான பேருந்துகள் தரிக்கப்படுவதைநிறுத்துவதற்குஅதுமுதலில்முயல்கின்றது. எப்படியாக இருப்பினும் நகரினுள் நெரிசலைக் குறைக்கும் முயற்சியின் முதல்படியாக பேருந்து நிலையம் அங்கிருந்து அகற்றப்பட்டு, பயணிகளை ஏற்றும் பேருந்துத் தரிப்பிடம் ஒன்று மட்டுமே அங்கு அமையவேண்டும். அதற்கான திட்டங்களும் கடந்த காலங்களில் தீட்டப்பட்டிருந்தன. அதே நேரம் போதனா வைத்தியசாலையும் இதற்கு மேலும் நகரத்திற்குள்ளேயே ஊதிப் பெருக்காமல் பண்ணை போன்ற தளங்களை நோக்கி நகரவேண்டியதும் அவசியம்.

போக்குவரத்துப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஆளுநர் சார்பில் ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. பேருந்துகளின் பிரச்சினையைத் தீர்ப்பது மட்டும் நகரின் நெரிசலைக் கட்டுப்படுத்தப் போதுமானதாக இருக்காது. போதனா வைத்தியசாலையின் அளவுக்கு மீறிய வளர்ச்சி தொடர்பான கட்டுப்பாடுகளும் இங்கு அவசியமானது. இந்த இரு விடயங்களிலும் ஒரு சேரக் கவனம் செலுத்தாமல் நகரின் நெருக்கடியை தீர்ப்பது இயலாதது. எனவே ஆளுநர் இந்த இரு தரப்புகளுடனும் கலந்துரையாடி இரு தரப்பிலிருந்தும் கணிசமான பகுதிகளை நகரில் மையத்திலிருந்து வெளியேற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும். அப்போதுதான் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் காண முடியும்.

# சம்மந்தன் எனும் உறைகல்

என். சத்திய மூர்த்தி




அதோ வருகிறது, இதோ வருகிறது என்று பயமுறுத்திய தமிழ் அரசுக் கட்சித் தலைவருக்கான தேர்தல் கடைசியில் அரங்கேறிய பின்னர் ஆளாளுக்கு அடிக்கும் கூத்து ஒட்டு மொத்த தமிழ் சமூகமே தற்போதைய தலைமுறையினரை தாண்டி இளம் தலைவர்களை அடையாளம் கண்டு, அவர்களை ஊக்குவிக்க வேண்டுமா, என்ற கேள்வி தானாகவே எழுகிறது. இந்தக் கேள்வி தமிழ் அரசு கட்சிக்கும் அப்பால் ஒருமித்த ஒரு சமூகத்தை கட்டி எழுப்பும் முயற்சி குறித்த ஒன்றாகும். அதில், தற்போது போல் இல்லாமல், யார் பெரியவன் என்ற கேள்விக்கு இடமில்லை.

தற்போதைய தலைவர்களில் வயது அடிப்படையில் ஆனந்தசங்கரி (91) மற்றும் சம்மந்தன் (91) ஆகியோரே மிக மூத்தவர்கள். தொடர்ந்து விக்னேஸ்வரன், சி வி கே சிவஞானம் மற்றும் ஆகியோரது வயது 84, மாவை சேனாதிராஜா 81, சித்தார்த்தன் 75. தொட்டடுத்த தலைமுறையினரில,



சுரேஸ் பிரேமச்சந்திரன் (66) செல்வம் அடைக்கல நாதன் (61), சுமந்திரன் (60), சிறீதரன் (55). இது தவிர, ஸ்ரீகாந்தா, சிவாஜிலிங்கம் ஆகிய இருவருமே இளம் வயதினர் அல்லர்.





இவர்களில், சித்தார்தன், ஓரளவிற்கு ஸ்ரீகாந்தா மற்றும் சிவாஜிலிங்கம் தவிர்த்த அனைவருமே தமிழ் இனத்தின் தலைமைத்துவத்தை குறி வைத்தே காய் நகர்த்தி வந்துள்ளார்கள். என்ன, இவர்களில் சம்மந்தன் மட்டுமே, இன அரசியலின் தலைவராக அனைத்து தரப்பினராலும் ஏதோ ஒரு விதத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டார். என்றாலும், வயது மூப்பு காரணமாக அவர் முற்றிலும் செயல் இழக்கும்வரை, தலைமை பொறுப்பை விட்டொழிய மறுத்தவர்.

### நம்ப வைத்து . . .

அதைவிடக் கொடுமை, கிழக்கு மாகாணத்தில் பிறந்து வளர்ந்து, வடக்கு மாகாணத்தவராலும் முன்பு ஒரு முறை நாடாளுமன்ற தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட சம்மந்தன் இனப்போர் முடிந்த காலகட்டத்தில், முதலில் சுமந்திரனையும், அது வேலைக்கு ஆகாது என்று தெரிந்த பின்னர் விக்னேஸ்வரனையும் முன்னிறுத்தி. இரு மாகாண அரசியலையும் தேசிய அளவில் முனனெடுத்தார்.

இருவருமே அப்பாவிகளாகச் சம்மந்தனை நம்ப வைத்து கழுத்தறுத்தவர்கள் என்று கருதப்படுகின்றனர். அதிலும் குறிப்பாக யாழ்பாண அரசியல்வாதிகளின் உண்மை முகமாக அவர்கள் காணப்படுகின்றனர்.

இவர்களில் விக்னேஸ்வரன்தான் முதலில் தனது சுய ஷரூபத்தை வெளிக்காட்டினார். தமிழ் அரசின் அங்கீகாரமும் கட்சியின் வீடு சின்னமும் கிடைத்திராவிட்டால், அவர் 2013 வடக்கு மாகாண சபை தேர்தலில் முதல்வராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கா மாட்டார். அது அவர் உணராத விடயம்.

சுமந்திரனின் கதை அதைவிட விசித்திரம். சுமந்திரனை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முதல் முதலமைச்சர் வேட்பாளர் என்று சம்மந்தன் முடிவு செய்தமைதான். பின்னர் அந்த இடத்திற்கு விக்னேஸ்வரனை முன்னிறுத்தினார். இருந்தாலும் சுமந்திரனை மொத்தமாகக் கழற்றி விடாமல், தேசிய அரசியலில் தனக்கு வாரிசு என்று கூவி, கூவி விற்றார். ஆனால், அண்மைக் காலங்களில் உடல் நலம் கருதி, சம்மந்தன் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்ய வேண்டும் என்று ஒலித்த குரல்களில், சுமந்திரனின் குரலே உயர்ந்திருந்தது.

அது மட்டுமல்ல. தேசிய அரசியலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கே, 2015- - 19 காலகட்டத்தில் பிரதமராகச் செயல்பட்ட போது, அவருடன் தோளுக்கு தோள் கொடுத்து சுமந்திரன் செயலாற்றி வந்தார். ஆனால், கடந்த 2022-ஆம் ஆண்டு ரணில் ஜனாதிபதியாகும் சூழ்நிலை உருவானபோது, தமிழர் தரப்பில் இருந்து சுமந்திரன் மட்டுமே அவரை எதிர்த்துப் பரப்புரை செய்தார். அவருக்கு கட்சி மற்றும் கூட்டமைப்பு தலைமையின் அனுமதி இருந்ததாக தெரியவில்லை.

அது போன்றே, கடந்த வருடம் இல்லாமலாகிப் போன உள்ளுராட்சி சபைத் தேர்தல்களில் தமிழ் அரசுக் கட்சி கூட்டமைப்பில் இருந்து விலகி தனித்துவமாக போட்டியிடவேண்டும் என்ற கருத்தியல் வாதத்தை முன் வைத்தவரும் அவர்தான். கடைசியில், அந்தத் தேர்தல் நடைபெறவில்லை. ஆனால், கூட்டமைப்பு மட்டும் உடைந்தது.

### அண்ணன் இருக்கும் போதே

இன்று கூட்டமைப்பு மற்றும் தமிழ் அரசுக் கட்சி சின்னபின்னாமாகிப் போனதற்குக் காரணம் இரண்டு பேர். ஒன்று சுமந்திரன். அவர் வளர்த்த கடா. மற்றவர் செல்வம் அடைக்கலநாதன். அண்ணன் சம்மந்தன் இருக்கும் போதே தன்னைக் கூட்டமைப்பின் துணைத் தலைவர் என்று பிரகடனப்படுத்தி அதன்படி செயல்பட முயன்றவர்.

செல்வம் அத்துடன் நின்று விடவில்லை. தனது கைதடியை கூட்டமைப்பின் பிரதி பேச்சாளராக உலா வர வைத்தார். இருவருமாக, சர்வதேச அங்கீகாரத்திற்காக கொழும்பில் வெளிநாட்டு தூதரங்களின் கதவுகளை தட்டிய வண்ணம் இருந்தனர். இடைப்பட்ட காலத்தில், சம்மந்தனை மீறி, அனைத்துத் தமிழ் கட்சிகளின் சார்பாக இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் என்ற கூத்து வேறு.

முடிவு? முதலில் கூட்டமைப்பு உடைந்தது. பின்னர், தமிழ் அரசு நீதிமன்றத்தில் நிற்கிறது.

(5ஆம் பக்கம் பார்க்க..)

# சம்மந்தன் எனும் உரைகல் . . . . .

(4ஆம் பக்கத் தொடர்ச்சி..)

இதில் கொடுமை என்னவென்றால், உள்ளதையும் போட்டு உடைத்து விட்டு, அதே செல்வம், தற்போது தமிழ் அரசு பிரச்சினையில் பஞ்சாயத்து செய்ய தான் தயார் என்று கருத்துக் கூறுவதுதான். தன்னுடைய ரெலோ கட்சியின் கூட்டுத் தலைவர்களாக இருந்த ஸ்ரீகாந்தா மற்றும் சிவாஜிலிங்கம் ஆகியோரை கழற்றி விட்டுவிட்டு, தன் போக்கிற்கு அரசியல் செய்து வரும் செல்வம், யாரை சமாதானம் செய்யப் போகிறார்?

**என் வழி , தனி வழி**

தற்போது தமிழ் அரசு கட்சிக்குள் அணி திரட்டி வரும் சிறீதரன் மற்றும் சுமந்திரன் ஆகிய இருவரின் தலைமையையும் மறு தரப்பார் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. தமிழ் அரசு மற்றும் உடைந்துபோன கூட்டமைபபிற்கு வெளியே இருந்து கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தென்படுகிறார். வயது 51. அது அவருக்கு 'ப்ள்ஸ் பாய்ன்ட்' ஆனால், மூன்று தலைமுறை அரசியல் பாரம்பரியத்தை பறைசாற்றும் விதமாக, 'எனக்கு என்று ஒரு நாடு, எனது மக்கள், எனது அரசியல்' என்று சம காலத்துடன் ஒத்து போகாமலே அவர் இதுவரை வந்துவிட்டார்.

'என் வழி, தனி வழி' என்ற வசனம் ரஜினிகாந்தின் 'படையப்பா' திரைப்படத்தின் வெற்றிக்கு வேண்டுமானால் உதவி இருக்கலாம். ஆனால், இலங்கைத் தமிழர் அரசியலுக்கு அது சரிப்பட்டு வராது. இது வரை சரிப்பட்டு வரவில்லை.

இந்தப் பின்னணியில், தற்போதைய தலைமுறையினரில் இருந்து புதிய ஒரு தலைவரை அல்லது தலைவர்களை காலம்தான் அடையாளம் காட்ட வேண்டும். இல்லை என்றால், தங்களது தோல்வியை ஒப்புக் கொண்டு, மூத்த தலைவர்கள் தமிழர்களின் அரசியல் தலைமையை அடுத்த தலைமுறையினரிடம் ஒப்படைத்து விட்டு ஒதுங்கி விடவேண்டும்.

இன்று அறுபதுகளில் உள்ள தலைவர்கள், அடுத்த பத்தாண்டுகளில் சாதித்து விடப்போவது எதுவுமில்லை. இன்னும் சொல்லப்போனால், அடுத்த ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில், இவர்களில் ஒவ்வொருவரும் முக்கி முனகி வெற்றி பெற்றால்தான் உண்டு.

முன்பு, சுரேஸ் பிரேமசந்திரன் மற்றும் மாவையார் ஆகியோர் நாடாளுமன்ற தேர்தலில் தோல்வி அடைவோம் என்று தெரிந்தும் போட்டியிட்டு அவமானப்பட்டார்கள். அடுத்த ஆண்டும் அந்தக் கதை தொடரும்.

**தலைமைத்துவப் பண்பு**

அடுத்த தலைமுறையினரில் யார்தான் உள்ளனர்? சார்ல்ஸ் நிர்மலநாதன். வயது 48. ஆனால், அவர் தமிழர் அரசியலைவிட தலைநகர் கொழும்பில் ஜனாதிபதி ரணில் தரப்பு அரசியலிலேயே அதிக நாட்டம் கொண்டுள்ளார் என்ற எண்ணம் பரவி உள்ளது. குறிப்பாக, தன்னை ஒரு தமிழர் தலைவராக அவர் செதுக்கிக் கொள்ளவில்லை.

அது போன்றே, சத்தியலிங்கம், ஜங்கரநேசன் போன்றோர், தங்களுக்குள் தலைமைத்துவத்தை வளர்த்துக் கொள்ளவில்லை. அல்லது தலைமைத்துவத்தை வளர்த்துக் கொண்டாலும் அதனை குடத்தில் இட்ட விளக்காக வெளி உலகத்திற்கு காண்பிக்காமலே இருந்து விட்டனர்.

இவர்களில் குறிப்பாக ஐங்கரநேசன், விக்னேஸ்வரன் அமைச்சரவையில் உறுப்பினராக இருந்த காலத்தில் முன்னெடுக்கப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுக்கள் அவரது அரசியல் எதிர்காலத்திற்கு அப்போதும், இப்போதும் எப்போதும் ஆப்பு அடிக்கும். ஆனால் விக்னேஸ்வரனுக்கு பதவி ஆசை அவரது கண்ணை மறைக்கும்வரை, சத்தியலிங்கம் அவரது வாரிசாகவே காணப்பட்டார்.

அது போன்றே, தற்போது ஐம்பது வயது ஆகி உள்ள செல்வராசா கஜேந்திரன். யாழ்இ பல்கலைக்கழக முன்னாள் மாணவர் தலைவர், விடுதலை புலிகள் அமைப்பால் அடையாளம் காணப்பட்டு 2004 தேர்தலில் நாடாளுமன்ற உறுப்பினர் ஆனவர். இவ்வாறு பல 'சிறப்புகள்' இருந்தாலும், இன்று அவர் கஜேந்திர குமார் பொன்னம்பலத்தின் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் என்பதைத் தவிர எந்தத் தலைமைத்துவப் பண்புகளுக்கும் இல்லாதவர்.

போதாததற்கு, கடந்த ஆண்டு திலீபன் நினைவேந்தல் ஊர்த்தி பயணத்தை திரிகோணமலையின் சிங்கள பகுதிகளுக்கு எடுத்து சென்று பிரச்சினைக்கு உள்ளானவர். அதனால், தமிழர் மத்தியில் அவருக்கு எந்த நல்ல பெயரும் கிடைத்துவிடவில்லை. மாறாக, இல்லாத இனப்பிரச்சினையை உருவாக்கியவர் என்ற பெயர் தான் மிஞ்சியது.

**ஒரே புள்ளி**

இவர்கள் அனைவருக்கும் கீழே, வயது விடயத்தில் சாணக்கியன், 33. தனது கண்டி மற்றும் ராஜபக்சாக்களுடனான சுதந்திர கட்சி பின்னணி, தொடர்ந்து பிள்ளையானுடனான வாசம் ஆகியவற்றை உடைத்தெறிந்து, இன்று தமிழ் அரசு கட்சியின் முக்கிய பேச்சாளராக திகழ்கிறார். நாடாளுமன்றத்தின் உள்ளும் புறமும் அவர் பேசுவதை அனைத்து தரப்பினரும் கவனமாக கேட்கின்றனர்.

அது போன்றே, 2021இல் 'பொத்துவில் முதல் பொலிகண்டி வரை' பேரணி அவரது செயல் திறனுக்கு எடுத்துக்காட்டாக அமைந்தது. ஆனால், அதற்கு அப்பாலும் சென்று, தலைமைத்துவப் பண்பை அவர் வளர்த்துக் கொண்டதாக தெரியவில்லை. காரணம், உள்வீட்டில் ஆகட்டும், உள் நாட்டில் ஆகட்டும், சர்வதேசத்திடம் ஆகட்டும், அவர்கள், சம்மந்தனையே உரைகல்லாக வைத்து சாணக்கியனையும் எடை போடுவார்கள். இதுவே, சுமந்திரன், சிறீதரன் ஆகிய அனைத்து தலைவர்களுக்கும் பொருந்தும்.

சாணக்கியன் என்னவோ, இடைப்பட்ட காலத்தில், சுமந்திரனோடு ஐக்கியமாகி விட்டதாக எண்ணப்பட்டது. அண்மை காலத்தில், அவர்கள் இருவரும் ஒரு சேர செயல்படவில்லை. என்றாலும், அந்த எண்ணம் இன்னமும் மாறிவிடவில்லை. அதனால் தானோ என்னவோ, தற்போதைய தமிழ் அரசு உள்வீட்டு குழப்பங்கள் குறித்து அவர் வாய் மூடி மௌனியாகவே இருக்கிறார்.

தனது வயது, அரசியல் அனுபவம் அல்லது அனுபவமின்மை மற்றும் எதிர்காலம் ஆகியவற்றை மனதில் கொண்டு, சாணக்கியன் மெதுவாகவே காய் நகர்த்துகிறார் என்றே எண்ண தோன்றுகிறது. வேறு காரணங்கள் இல்லை என்றாலும், இனப்பிரச்சினையின் சர்வதேச அலகுகளையும் அரசியல் யாப்பு விடயங்களையும் கற்றறிய சம்மந்தனுக்கு பின்னர் சுமந்த்திரனை தவிர யார் இருக்கிறார்கள்?

என்ன, இவ்வளவு விவரித்து எழுதினாலும் பேசினாலும், அவை அனைத்துமே ஒரே புள்ளியில்தான் சேர்கிறது. தமிழர்களின் அடுத்த தலைமுறை அரசியல் தலைமை யார்? அவர் 'தமிழ் தேசிய பரப்பு' என்று பகடி கூறும் வகையினராகதான் இருக்க வேண்டுமா? அதற்கான உரைகல் எது? புலம்பெயர்ந்தோரின் அத்தாட்சி பத்திரமா? அல்லது தற்போது 'தமிழ் நண்டு' அரசியல் செய்யும் கடந்த, இந்த தலை முறையினாரா? அவர் அல்லது அவர்கள் யாராக இருந்தாலும், அவர்களை இந்த தலைமுறையிலேயே முன்னிறுத்தப் போவது யார், யார்?


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்

(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, ஈராவணா,

ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,

ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்





தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி

முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை

தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு

மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி

உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்

தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்

சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-

பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd





கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=




# சைவ விரதங்கள்

மக்களின் வாழ்வை நெறிப்படுத்த உதவும் சாதனங்களே விரதங்கள் ஆகும். ஆதற்கு ஆறுமுகநாவலர் 'மனம் பொறிவழிப் போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் கடவுளை விதிப்படி மெய்யன்போடு வழிபடுதல் விரதம் என அழகாக குறிப்பிட்டுள்ளார். மனிதன் தனது உடலையும் உள்ளத்தையும் ஒருங்குபடுத்தும் திருநாட்களே விரதங்கள் ஆகும். நாம் விரதத்தை அனுஷ்டிப்பதால் எமது உடல் மேம்படுத்தப்படுவதுடன் கடவுள் மீதான பக்தியும் விருத்தியடையும். விரதம், நோன்பு என்பன ஒரு பொருட் சொற்களாகும். நாம் விரத நாளன்று பஞ்சமாபாதகங்களைத் தவிர்த்து இயன்றளவு தான தர்மம் செய்வது சாலச் சிறந்ததாகும்.





நாம் விரதங்களை பிரதானமாக வாரம், திதி, நட்சத்திரம் என்ற அடிப்படையில் அனுஷ்டிக்கின்றோம். வார விரதங்களாக திங்கட்கிழமை விரதம் (சோமவாரம்), செவ்வாய்க்கிழமை விரதம் (மங்கள வாரம்), வெள்ளிக்கிழமை விரதம் (சுக்கிரவாரம்), சனிக்கிழமை விரதம் போன்றவற்றையும் திதி விரதங்களாக சதுர்த்தி, சங்கடகர சதுர்த்தி போன்றவற்றையும் நட்சத்திர விரதங்களாக தைப்பூசம், மாசிமகம், வைகாசி விசாகம், திருக்கார்த்திகை விரதம் போன்றவையும் அனுஷ்டிக்கப்படுகின்றன.



ஒவ்வொரு விரதத்திற்கும் ஒவ்வொரு நியதிகள் உண்டு. ஆனால் விரதத்திற்கு சில பொதுவான விதிமுறைகள் உண்டு. அவ் விதிமுறைகள் அதிகாலையில் துயில் எழுதல், நீராடுதல், தோய்த்துலர்ந்த ஆடை அணிதல், இறை வழிபாட்டை மேற்கொள்ளுதல், ஆலய தரிசனம் செய்தல், தோத்திரங்களை ஓதுதல், உணவைத் தவிர்த்தல் அல்லது குறைத்தல், மனக் கட்டுப்பாட்டுடன் இருத்தல் போன்றவையாகும். அதேபோல் நாம் விரத நாளன்று புகைப் பிடித்தல், மது அருந்துதல், பொய் சொல்லுதல் போன்ற தீய செயல்களிலும் ஈடுபடுவதை தவிர்க்க வேண்டும்.

நாம் விரதத்தை அனுஷ்டிப்பதால் தன்னம்பிக்கை, பணிவு, பக்தி, அன்பு, தியாகம், சகிப்புத்தன்மை போன்ற நற்பண்புகள் வளர்ச்சியடைவதோடு இறைவனின் பேரருளும் கிடைக்கும்.

ஆகவே மனிதனின் வாழ்வை மேம்படுத்தும் இந்தப் பெறுமதிமிக்க விரதங்களை அனுஷ்டித்து இறையருளைப் பெற்று இன்பமாக வாழ்வோமாக.

*சி. நஜிகா, யா/இந்து மகளிர் கல்லூரி.*

## பாடல் எண் : 1

**அன்னம் பாலிக்குந்**
**தில்லைச்சிற் றம்பலம்**
**பொன்னம் பாலிக்கு**
**மேலுமிப் பூமிசை**
**என்னம் பாலிக்கு**
**மாறுகண் டின்புற**
**இன்னம் பாலிக்கு**
**மோஇப் பிறவியே**

### பொழிப்புரை:

பேரின்பவீடு நல்கும் தில்லைத் திருச்சிற்றம்பலம் பொன்னுலக வாழ்வையும் தரும். இத்தகைய திருச சிற்றம்பலத்தை, மேலும் இந்நிலவுலகில் என் அன்பு பெருகும் வகையில் கண்டு, பரமுத்திப் பேரின்ப நிலையை எளிதின் எய்துதற்கு இந்த நல்ல மனிதப் பிறவியை இன்னும் கொடுக்குமோ முதல்வன் ?




முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்






















4th Project

இது ஒரு
கற்பகவனம்
செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர் Kalaikkathir

# தலைமன்னார் சிறுமி கொலை சந்தேகநபரின் மறியல் நீடிப்பு

தலைமன்னாரில் 10 வயதுச் சிறுமி வன்புணர்வின் பின்னர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபரின் விளக்கமறியல் காலம் மார்ச் 7 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மன்னார் நீதிவான் மன்றில் நேற்று இந்த விழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சந்தேகநபரின் விளக்கமறியல் காலத்தை நீடித்து நீதிவான் உத்தரவிட்டார்.

பெப்ரவரி 16 இரவு, வீட்டுக்கு அருகில் இருந்த கடைக்குச் சென்றுவிட்டுத் திரும்பிய சிறுமி காணாமற்போனார். மறுநாள் காலை அவர் சடலமாக தென்னந்தோப்பு ஒன்றிலிருந்து மீட்கப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பில் கைதான, அந்தத் தென்னந்தேப்பில் வேலை செய்யும் திருகோணமலை குச்வெளி பகுதியை சேர்ந்த 52 வயதுடையவர் கைது செய்யப்பட்டார். சந்தேகநபர் பெப்ரவரி 19 நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது அவரை பெப்ரவரி 29 வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

அதன்படி, சந்தேக நபர் இன்றைய தினம் மீண்டும் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது, உயிரிழந்த சிறுமியின் தாய், தந்தை, அம்மம்மா உள்ளிட்ட 5 பேரும் நீதிமன்றுக்கு வருகை தந்திருந்தனர். அவர்களிடமும் நீதிவான் சம்பவம் தொடர்பில் கேட்டறிந்தார். அதன் பின்னர் சந்தேகநபரின் விளக்கமறியல் காலத்தை நீடிதது உத்தரவிட்டார்.

# ஜனாதிபதியை சந்தித்தார் புதிய பொலிஸ் மா அதிபர்

பொலிஸ் மா அதிபராக நேற்று பதவியேற்றுக் கொண்ட தேசபந்து தென்னகோன் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்தார்.

இலங்கையின் 36ஆவது பொலிஸ் மா அதிபராக பதவியேற்ற புதிய பொலிஸ் மா அதிபருக்கு வாழ்த்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அவருடன் சிநேகபூர்வ உரையாடலிலும் ஈடுபட்டார்.

புதிய பொலிஸ் மா அதிபர் ஜனாதிபதிக்கு பரிசில் ஒன்றை வழங்கினார்.

# சாந்தன் இறக்க முன்னரே ஏன் இலங்கைக்கு அனுப்பவில்லை?

## தமிழ்நாடு அரசிடம் உயர் நீதிமன்றம் கேள்வி

சாந்தனை அவர் இறப்பதற்கு முன் பே இலங்கைக்கு ஏன் அனுப்பவில்லை என தமிழ்நாடு அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

நோய் வாய்ப்பட்டுள்ள தனது தாயை கவனிப்பதற்காக தன்னை இலங்கைக்கு அனுப்பி வைக்க உத்தரவிடக் கோரி சாந்தன் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார். இந்த மனு, நீதிபதிகள் ஆர்.சுரேஷ்குமார், குமரேஷ் பாபு அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது அரசு சார்பில் கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர் முனியப்பராஜ் ஆஜராகி, சாந்தனை இலங்கை அனுப்பவதற்கான பணிகள் நடைபெற்று வந்த நிலையில் துரதிர்ஷ்டவசமாக உயிரிழந்து விட்டதாக கூறினார்.

சாந்தனை இலங்கை அனுப்புவதற்கான அனுமதி எப்போது கிடைத்தது என நீதிபதிகள் கேள்வி எழுப்பினர். இதற்கு பதிலளித்த கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ஏ.ஆர்.எல். சுந்தரேசன், கடந்த 22ஆம் தேதி அவரை இலங்கை அனுப்புவதற்கான அனுமதி வழங்கப்பட்டு விட்டதாக தெரிவித்தார். சாந்தனை இலங்கைக்கு அனுப்ப 22ஆம் தேதியே மத்திய அரசு அனுமதி அளித்தும் ஏன் அனுப்பவில்லை எனநீதிபதிகள் கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த அரசு தரப்பு வழக்கறிஞர், ஜனவரி 24ஆம் தேதி முதலே சாந்தன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்ததாகவும் அவரால் நகரக்கூட முடியவில்லை எனவும் தெரிவித்தார். இதையடுத்து, சாந்தனின் மருத்துவ அறிக்கையை தாக்கல் செய்ய உத்தரவிட்ட நீதிபதிகள் விசாரணையை தள்ளி வைத்தனர்.

# பொலிஸ் மா அதிபரின் நியமனம் மூலம் அரசமைப்பை மீறியுள்ளார் சபாநாயகர்

## தேசிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

பொலிஸ்மா அதிபராக தேசபந்து தென்னக்கோனை நியமித்ததன் மூலம் சபாநாயகர் மகிந்த யாப்பா அபயவர்த்தன அரசமைப்பை மீறியுள்ளார் என தேசிய மக்கள் சக்தி குற்றம்சாட்டியுள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் டில்வின் சில்வா இதனை தெரிவித்துள்ளதுடன் இந்த விவகாரம் தொடர்பில் நீதிமன்றம் செல்வதற்கு கட்சி தீர்மானித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

அரசமைப்பு பேரவையின் தீர்மானம் ஜனாதிபதிக்கு தெரிவிக்கப்பட்ட பின்னரும் சபாநாயகர் தேசபந்து தென்னக்கோனின் நியமனத்திற்கு அனுமதி வழங்கியுள்ளார் என தெரிவித்துள்ள டில்வின் சில்வா இது அரசமைப்பிற்கு முரணான அதனை மீறும் விடயம் எனவும் குறிப்பிட்டுள்ளார். வாக்களிப்பில் சமநிலை காணப்பட்டால்தான் சபாநாயகரால் வாக்களிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்..

பொலிஸ்மா அதிபர் நியமனத்தினால் பிரச்சினை உருவாகியுள்ளது உயர்நீதிமன்றம் இதற்கு தீர்வை காணும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

## தனியார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லங்கா வைத்தியசாலை, வங்கிகள் உள்ளிட்டவற்றை தனியார் மயப்படுத்தும் செயற்பாடுகளுக்கு கட்சி என்ற வகையில் எம்மால் ஆதரவளிக்கும்இயலுமைஇல்லை.

கொள்கைப்பிரகடனத்தின் அடிப்படையிலேயேநாம்இந்தஆளும் தரப்பை உருவாக்கினோம். நாம் நியமித்தவர் கொள்கைப் பிரகடனத்துக்கு எதிராக செயற்படுவாராயின் அது தொடர்பில் அறிவிக்க வேண்டும். பிரதமருடனும், ஜனாதிபதியுடனும் கலந்துரையாடுவதற்கு எதிர்பார்க்கின்றோம் என்றார்.

அத்துடன் ஆசிய அபிவிருத்தி வங்கி ஊடாக குறைந்த வட்டியில் கடன் உதவிகளை வழங்கவும் எதிர்பார்க்கிறோம். சிறிய மற்றும் மத்திய தரத் தொழிலாளர்களை, தொழில்சந்தையை நோக்கி நகர்த்துவதே ஆளும் தரப்பின் எதிர்பார்ப்பாகும்.

அதேபோல் இலங்கை சர்ட் நிறுவனத்தின் ஊடாக தேசிய சைபர் பாதுகாப்புச் சட்டம் இவ்வருடத்திற்குள் கொண்டு வருவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. அதனையடுத்து சைபர் பாதுகாப்பு அதிகார சபையும் விரைவில் நிறுவப்படும்.

அத்தோடு, தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, கல்வி அமைச்சின் உதவியுடன் தொழில்நுட்ப வசதிகள் அற்ற 1000 பாடசாலைகளில் 700 பாடசாலைகளுக்கு இணைய வசதிகளைப் பெற்றுக்கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன் இரண்டாம் கட்டமாக பாடசாலைகள் மட்டத்தில் யுஐஎனப்படும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

கல்விஅமைச்சுடன்இணைந்து தொழில்நுட்ப அறிவைப் பெறாமலிருக்கும் 10,000 பட்டதாரிகளைத் தெரிவுசெய்து அவர்களுக்கு தொழில்நுட்ப அறிவை வழங்கும் வேலைத்திட்டம் மே மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

## சபாநாயகருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ள மையினால், அதனை உயர் நீதிமன்றத்தில்சவாலுக்கு உட்படுத்த முடியாது என்று மனு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது சட்டமா அதிபர் சஞ்சய் இராஜரத்னம் ஐந்து அடிப்படை ஆட்சேபனைகளை முன்வைத்து சுட்டிக்காட்டி இருந்தார்.

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள சட்டம் என்பதால், இந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கான சட்ட அதிகாரம் நீதிமன்றத்திற்கு இல்லை எனும் சட்டமா அதிபரின் தர்க்கத்தை ஏற்றுக்கொண்ட உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் மனுவை தள்ளுபடி செய்தது.

## சைபர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிகளைவெளிநாட்டுதூதரகங்கள், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு ஆகியன இணைந்து முன்னெடுக்கவுள்ளன.

கடந்த வருடத்தில் ளுடுளுஜ நிறுவனம் 50 மில்லியன் ரூபா இலாபத்தை திறைசேரிக்கு வழங்கியிருந்தது. அதன்படி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அறிவுறுத்தலுக்கமை, நாட்டின் பொருளாதாரத்திற்கு 52% பங்களிப்பை வழங்கும் சிறு மற்றும் மத்தியத் தர தொழில்துறையைப் பலப்படுத்த புதிய வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சிறு மற்றும் மத்திய தரத் தொழிலாளர்களை, தொழில்நுட்ப ரீதியாகப் பலப்படுத்துவதே அதன் நோக்கமாகும். இதன்போது தொழில் முனைவோருக்கு றூனிஊண மற்றும் றீஸிறீய் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.



# பேத்தாளை சந்திரகாந்தன் வித்தியாலயத்துக்கு இலத்திரனியல் உபகரணங்கள் வழங்கிவைப்பு





மட்டக்களப்பு கல்குடா கல்வி வலையத்துக்குப்பட்ட சந்திரகாந்தன் வித்தியாலய நிர்வாகம் மற்றும் கல்விச் சமூகம் விடுத்த கோரிக்கைக்கு அமைய இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் ஒன்றுகூடல் மண்டபத்திற்கான தளபாடங்களும் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும், மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவருமான சிவ. சந்திரகாந்தனின் ஆலோசனைக்கு அமைவாக விதுள் லங்கா நிறுவனத்தின் ஊடாக வழங்கி வைக்கப்பட்டன.

பேத்தாளை சந்திரகாந்தன் வித்தியாலய அதிபர் க. கதிர்காமநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவருமான சிவ.சந்திரகாந்தன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறப்பித்திருந்ததோடு தரம் மூன்று மாணவர்களின் கைவினைப் பொருள்கள் கண்காட்சியை பார்வையிட்டதுடன் மாணவச் செல்வங்களைப் பாராட்டிக் கௌரவித்திருந்தார்.

மேற்படி நிகழ்வில் கல்குடா வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் க. ஜெயவதனன் ,கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஜெயக்குமணன், பேத்தாளை விபுலானந்தா கல்லூரி அதிபர் முருகவேல், மிதுள் லங்கா நிறுவனத்தின் பொறியியலாளர்கள் நிமால் டிலால் பெனாண்டோ, ஜெய குணரத்ன, திட்டப் பணிப்பாளர்கள் ஷித்திக், ஷாபீர் உட்பட ஆசிரியர்கள் பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (05)

## அம்பாறை மாவட்ட செயலக கணக்காளராக ஐ.எம் பாரீஸ்

(சர்ஜ/ன் லாபீர்)

அம்பாறை மாவட்ட செயலாளரின் உள்ளக இடம்மாற்றத்திற்கிணங்க நிந்தவூரைப் பிறப்பிடமாகவும், சம்மாந்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட இலங்கை கணக்காளர் சேவை தரம் 01ஐ சேர்ந்த எஸ்.எல் ஐ.எம் பாரீஸ் புதன்கிழமை அம்பாறை கச்சேரியில் புதிய கணக்காளராக கடமைகளைப் பொறுப்பேற்றார்.

இந்நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபா, அம்பாறை பிரதம கணக்காளர் ஏ.எம் ஆதம்பாவா,சம்மாந்துறை பிரதேச செயலக கணக்காளர் எஸ். எல் சர்தார் மிர்ஸா,சம்மாந்துறை பிரதேச செயலக மேலதிக மாவட்ட பதிவாளர் ஏ.கே.ரினோஸா உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இவர் கல்முனை,அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை,சம்மாந்துறை பிரதேச செயலகம் போன்ற இடங்களில் கணக்காளராகவும் கடமையாற்றியுள்ளார். என்பது குறிப்பிடத்தக்கது. (05)

## எம். எஸ். தௌபீக் எம்பியினால் பள்ளிவாசலுக்கு மாபிள் வழங்கல்!




(எஸ். சினீஸ் கான்)

புல்மோட்டை அறபாத் நகர் பாரியா ஜ/ம்ஆப் பள்ளிவாசல் நிர்வாகத்தினரின் கோரிக்கைக்கமைவாக பள்ளிவாசலுக்கு தேவையான மாபிள்கள் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக்கால் திங்கட்கிழமை வழங்கிவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் குச்சவெளி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் முபாறக், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்களான சல்மான் பாரிஸ், முஜீப், பள்ளி நிருவாகசபை உறுப்பினர்கள் மற்றும் பிரதேச மக்கள் கலந்துகொண்டனர். (05)

## பழீல் ஆசிரியரின் இழப்புக்கு இரங்கல்



(நூருல் ஹுதா உமர்)

அரசறிவியல் முதுநிலை பட்டதாரியும், சிரேஷ்ட ஆசிரியருமான ஏ.சி.எம் பழீல் காலமான செய்தி அறிந்து மிகவும் அதிர்ச்சி அடைந்தவனாக இருக்கிறேன். எனது உறவுமுறை காரராகவும் இருக்கும் லொஜிக் பழீல் என்று அழைக்கப்படும் பழில் ஆசிரியர் எல்லோராலும் அன்புடன் நேசிக்கப்பட்ட ஒருவர்.

குறிப்பாக கல்முனை பிராந்தியத்தில் பல பட்டதாரிகளை உருவாக்கிய பெருமை அவரையே சாரும். சாய்ந்தமருது கமுஃஅல்- கமஷரூன் வித்தியாலயத்தில் முதன் முதலாக இப்பிராந்தியத்தில் ஜி.ஏ.கியு. எனப்படும் வெளிவாரி பட்டப்படிப்பினை ஆரம்பித்தவர் அவராவார். இன்று ஆயிரக்கணக்கான பட்டதாரிகள் இப் பிராந்தியத்தில் உருவாகியுள்ளார் என முன்னாள் இராஜாங்க அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் அனுதாப செய்தியில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவரது அனுதாப செய்தியில் -

ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மாணவர் காங்கிரஸ் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவராக இருந்து மாணவர் காங்கிரஸ் தலைவராக என்னோடு சேர்ந்து கட்சியை பலப்படுத்துவதில் முன்னின்று உழைத்தவர். பெருந்தலைவர் மர்ஹூம் தளம்.எச்.எம். அஸ்ரபோடு இணைந்து கட்சியை நேசித்தவர். தலைவரோடு இணைந்து கட்சிக்காக பாடுபட்டவர். எனது நாடாளுமன்ற அத்தனை தேர்தல்களிலும் எனக்கு பக்கபலமாக நின்று எனது தேர்தல் வெற்றிக்கு பங்களிப்பு செய்தவர், முஸ்லிம் சமுதாய விடயங்களில் பல புத்தகங்களை எழுதி அதனூடாக முஸ்லிம் சமுதாய விழிப்புணர்வுகளை ஏற்படுத்தியவர்.

அன்னாரின் மறைவால் துயரும் அவரின் குடும்பத்தாருக்கு எனது ஆறுதல்களை தெரிவித்து கொள்வதுடன் எல்லாம் வல்ல அல்லாஹுத் தஆலா அவரின் நல்லமல்களை பொருந்திக் கொண்டு உயரிய ஜன்னத்துல் பிர்தௌஸ் சுவன பாக்கியத்தை வழங்க பிரார்த்திக்கின்றேன் என்று தெரிவித்துள்ளார். (05)

## ஊழியர்களின் போராட்டம் காரணமாக தென்கிழக்கு பல்கலை ஸ்தம்பிதம்

*(நூருல் ஹுதா உமர்)*

*நாடளாவிய ரீதியில் பல்கலைக்கழக தொழிற்சங்கங்களின் சம்மேளனம், முன்னெடுத்துள்ள தொடர்ச்சியான இரு நாள்கள் கொண்ட அடையாள வேலை நிறுத்தத்தின் எதிரொலியாக தென்கிழக்கு பல்கலைக்கழக ஊழியர்கள் முன்னெடுத்துள்ள போராட்டம் காரணமாக பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளன.*

*நிறைவேற்று உத்தியோகத்தகள் சங்கத்தின் தலைவர் எம்.எச். நபார் மற்றும் கல்விசார ஊழியர்கள் சங்கத்தின் தலைவர் எம்.ரி.எம். தாஜ/டீன் ஆகியோரது இணைந்த தலைமையில் இடம்பெற்ற குறித்த அடையாள வேலை நிறுத்த போராட்டத்தில் பெரும் அளவான ஊழியர்கள் பங்கு கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.*

*போராட்டத்தின் காரணமாக 2024.02.29 ஆம் திகதி இடம்பெறவிருந்த 12 ஆவது சர்வதேச ஆய்வரங்கு அடுத்த தினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் இங்கு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. தென்கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் செயலாளர் எம். எம். முகமது காமிலின் வழிகாட்டலில் இடம்பெற்ற இப்போராட்டத்தில் வாக்களிக்கப்பட்ட 107வீத சம்பள அதிகரிப்பை வழங்கு, உறுதியளித்த 25 வீத எம்சிஏ கொடுப்பனவை வழங்கு என்பன போன்ற பல்வேறு கோரிக்கைகளுக்கு அரசாங்கம் தீர்வை தர வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டன.*

*இங்கு ஒற்றுமையே பலம், சமத்துவமே எம் தேவை, அரசாங்கமே கண்முளித்துப்பார், 8 வருட ஏமாற்றம் இன்னும் தொடருமா?, வேண்டாம் வேண்டாம் பாகுபாடு வேண்டாம், புத்திஜீவிகளை உருவாக்கும் அரச ஊழியர்களாகிய நாங்கள் நடுத்தெருவில் என்பன போன்ற கோஷங்கள் எழுப்பப்பட்டன.* *(05)*

காலைக்கதிர் Kalaikkathir

# கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்






(பாறுக் ஷிஹான்)

பல்கலைக்கழக ஊழியர்கள் எதிர்நோக்கும் சம்பளப் பிரச்சினை மற்றும் பல்கலைக்கழக ஊழியர்களுக்கு நீண்ட நாள்களாக தீர்க்கப்படாதுள்ள கோரிக்கைகளுக்கு தீர்வு வழங்குமாறு கோரி கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர்கள் முன்னெடுத்த ஆர்ப்பாட்டம் புதன்கிழமை மட்டக்களப்பில் நடைபெற்றது.

அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்க கூட்டமைப்பின் தீர்மானத்திற்கு இணங்க, நாட்டில் உள்ள அரச பல்கலைக்கழகங்களில் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் இருநாள் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு அமைவாக, மட்டக்களப்பு நகரில் அமைந்துள்ள கிழக்குப் பல்கலைக்கழக வெளிவாரி கற்கைகள் நிலையம் முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

2016 ஆம் ஆண்டைய சம்பள சீர்திருத்தத்திற்கு அமைவாக பல்கலைக்கழக ஊழியர்களுக்கு தருவதாக அரசால் வாக்குறுதியளிக்கப்பட்டு இன்றுவரை வழங்கப்படாதுள்ள 15 வீத சம்பள அதிகரிப்பை வழங்கக் கோரல், மாதாந்த இடர் கொடுப்பனவை அதிகரித்தல், பல்கலைக்கழக சேமலாப நிதியை வேறு தேவைகளுக்கு அரசாங்கம் பயன்படுத்துவதற்கு எதிர்ப்பு வெளியிடல், அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவுக்கேற்ப ஊதிய அதிகரிப்புச் செய்ய வலியுறுத்தல், பல்கலைக்கழகங்களில் நீண்டகாலமாக காணப்படும் பதவி வெற்றிடங்களை நிரப்பி நிர்வாக விடயங்களை சுமுகமாக முன்னெடுக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளல், உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மேற்படி கோரிக்கைகள் உட்பட பல்வேறு விடயங்களை முன்னிறுத்தி 2023.11.02 மற்றும் 2024.01.18 ஆகிய தினங்களில் பல்கலைக்கழக ஊழியர்களால் அடையாள பணிபகிஷ்கரிப்பு மற்றும் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டும் அவற்றுக்கான தீர்வுகள் வழங்கப்படாததன் காரணமாக இருநாள் தொடர் பணி பகிஷ்கரிப்பு மற்றும் தொழிற்சங்க போராட்டங்கள் நடைபெற்றன.

இது குறித்து மேலும் தெரிய வருவதானது,

2016 ஆம் ஆண்டைய சம்பள சீர்திருத்தத்தில் பல்கலைக்கழக ஊழியர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் அன்று தொடக்கம் இன்று வரை பல்கலைக்கழக தொழிற்சங்கங்கள் பல்வேறு கலந்துரையாடல்கள் நடத்தியும், அறிக்கைகள் சமர்ப்பித்தும், போராட்டங்கள் நடத்தியும் தீர்வு வழங்கப்படவில்லை.

அத்துடன் பல்கலைக்கழக ஊழியர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் பொருட்டு அமைச்சரவை உபகுழு அமைக்கப்பட்டும், பல்வேறுபட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டும் இன்றுவரை அவற்றுக்கான தீர்வுகள் அரசால் வழங்கப்படாமலும் சம்பள அதிகரிப்புச் செய்யப்படாமலும் இழுத்தடிப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

தற்போதைய கல்வி அமைச்சரின் ஏற்பாட்டில், 2024.01.22 ஆம் திகதி நிதி அமைச்சின் சாரபில் நிதி ராஜாங்க அமைச்சர், நிதி அமைச்சின் செயலாளர், நிதி அமைச்சின் அதிகாரிகள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பிரதிநிதிகள் மற்றும் அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்க கூட்டமைப்பின் பிரதிநிதிகளுக்கு இடையிலான சந்திப்பு நடைபெற்றது.

இதன் போது, பல்கலைக்கழக ஊழியர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகள் பெற்றுத்தர உடன்பாடுகள் எட்டப்பட்டது மாத்திரமன்றி கோரிக்கைகள் தொடர்பாக ஆராய்ந்து மூன்று வாரங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்கும் பொருட்டு திறைசேறி, கல்வி அமைச்சு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பிரதிநிதிகள் அடங்கிய குழுவொன்று அமைக்கப்பட்டது. இந்தக் குழுவிற்கு வழங்கப்பட்டிருந்த மூன்று வாரகாலம் 2024.02.13 ஆம் திகதியுடன் நிறைவு பெற்றது.

இந்த குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் இவ்வறிக்கைக்கு அமைய, இதற்கான தீர்வுகள் அடங்கிய அமைச்சரவை பத்திரம் 2024.02.19 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டு அது நடைபெறவில்லை.

அதேவேளை, அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்க கூட்டமைப்பின் பிரதிநிதிகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தலைவருடனான சந்திப்பொன்றை மேற்கொண்டிருந்தனர். இச்சந்திப்பின் போது, அறிக்கை முடிவுகளை பரிசீலனை செய்யும் பொருட்டு மேலும் ஒரு வார காலக்கெடுவை ஆணைக்குழு கோரியிருந்தது. அந்தக் காலப்பகுதியினுள் தீர்வுகள் வழங்கப்படவில்லை.

2024.02.26இல் நடைபெற்ற அமைச்சரவையில் ஊழியர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்கும் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டு அது நடைபெறாத நிலையில் இந்த இருநாள் பணிபகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்படுகின்றது.

இதேவேளை அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்க கூட்டமைப்பின் ஏற்பாட்டில், இலங்கையில் உள்ள அரச பல்கலைக்கழக ஊழியர்களின் பங்குபற்றலுடன் கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்ட பேரணி நடைபெற்றதாக தகவல் வெளியாகி உள்ளது குறிப்பிடத்தக்கது.

கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக நிருவாக உத்தியோகத்தர்கள் சங்கம் என்பன இணைந்து முன்னெடுத்த இந்த ஆர்ப்பாட்டம் மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியில் நடைபெற்றது.

(05)

# 'ஏ. ஆர். எம். ஜிப்ரி ஒரு சகாப்தம்' நூல் அறிமுக விழா

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

இலங்கை ஒலிபரப்பாளர் ஒன்றியத்தின் ஆதரவில் மறைந்த ஒலி - ஒளிபரப்பாளரும் கல்வியலாளருமான மர்ஹூம் ஏ.ஆர்.எம். ஜிப்ரியின் நான்காவது வருட நினைவு தின நிகழ்வும், 'ஏ.ஆர்.எம். ஜிப்ரி ஒரு சகாப்தம்' எனும் நூல் அறிமுக நிகழ்வும் எதிர்வரும் மார்ச் 03 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணி முதல் மாளிகைக்காடு பாபா ரோயலி வரவேற்பு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இலங்கை ஒலிபரப்பாளர் ஒன்றியத்தின் தலைவரும் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளருமான சிரேஷ்ட ஒலி - ஒளிபரப்பாளர் யூ.எல். யாகூப் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், சர்வதேசப் புகழ் ஒலிபரப்பாளர் பி.எச். அப்துல் ஹமீத் முன்னிலை வகிப்பதோடு, அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான றிசாத் பதியுதீன் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் ஆகியோர் முதன்மை அதிதிகளாகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி, சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக், கல்முனை பணிமனையின் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சஹிலா எஸ். இஸ்ஸடீன், கல்முனை பொலிஸ் நிலைய தலைமையகப் பொறுப்பதிகாரி எம். றம்ஸீன் பக்கீர், கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலை அதிபர் எஸ். கலையரசன் ஆகியோர் நிகழ்வில் சிறப்பதிகளாகவும் கலந்து கொள்வர்.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ் நிகழ்வில் நினைவுப் பேருரையை நிகழ்த்துவதோடு, இலங்கை ஒலிபரப்பாளர் ஒன்றியத்தின் செயலாளர் சட்டத்தரணி ஏ.எம்.தாஜ் நூல் அறிமுக உரையையும் நிகழ்த்துகின்றனர்.

இலங்கை ஒலிபரப்பாளர் ஒன்றியத்தின் தேசிய அமைப்பாளர் சிரேஷ்ட ஒலி - ஒளிபரப்பாளர் மனிதநேயன் இர்ஷாத் ஏ. காதர் நிகழ்ச்சி நெறியாள்கையையும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுதாபன பிறை எப்.எம். அறிவிப்பாளர் ஏ.ஆர்.எம். நௌபீல் நிகழ்ச்சி ஒழுங்கமைப்பையும் செய்துள்ளனர்.

(05)

# திருகோணமலை கோனேசரின் ஊர்வலத்துக்கு கேடகம் தயார்

(ஹஸ்பர் ஏ.எச்)

சிவராத்திரியை முன்னிட்டு திருகோனேஸ்வரரின் ஊர்வலம் இடம் பெறவுள்ள நிலையில் ஊர்வலத்துக்காக பயன்படுத்தப்படும் கேடகம் உடைந்து பழுதடைந்துள்ளதால் அதனை சரி செய்ய 15 லட்சம் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட கேடகம் பயன்படுத்தப்படும் என திருகோணமலை மாவட்ட நலன்புரி சங்க தலைவர் சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.

கனடாவில் உள்ள திருகோணமலை நலன்புரி சங்கம் இதற்கான நிதி உதவிகளை வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தார். திருக்கோனேஸ்வர ஆலயத்துக்கு கடந்த செவ்வாய்க்கிழமை சென்ற அவர் குறித்த நிதியை உரியவரிடம் கையளித்ததன் பின்பே இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்வரும் 8 ஆம் திகதி ஊர்வலம் சிவராத்திரியை முன்னிட்டு இடம் பெறும் எனவும் மேலும் தெரிவித்தார்.

(05)

# போதைப் பொருள் விற்பனை உழவனூரில் பெண் கைது

தருமபுர பொலீஸ் பிரிவுக்கு உட்பட்ட உழவனூர் பகுதியில் தர்மபுர பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக அன்றைய தினம் செவ்வாய்க்கிழமை சுற்றி வலைப்பை மேற்கொண்டனர்.

இதன் போது பெண் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் ஜயிஸ் 165 மில்லிகிராம் கெரோயின் 3900 மில்லி கிராம் விற்பனைக்காக வைத்திருந்த நிலையில் பெண்ணெருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பெண் புதன்கிழமை கிளிநொச்சி நீதிமன்றம் முப்படுத்தப் பட்டார் என தருமபுர பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி டி எம் சதுரங்க தெரிவித்துள்ளார்.

(05-113)

# தேசிய அடையாள அட்டை விடயத்தில் தோட்ட நிர்வாக தலையீடு வேண்டாம்

## அமைச்சர் ஜீவன் தொண்டமான் நடவடிக்கை

மலையக பெருந்தோட்டப்பகுதிகளில் வாழ்பவர்கள் தேசிய அடையாள அட்டையை பெறுவதற்கான முயற்சியின் போது எதிர்கொள்ளும் பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் நடவடிக்கை எடுத்து வருகின்றார்.

இது தொடர்பில் ஆட்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர் பிரதீப் சபுதந்திரிக்கு அவசர கடிதமொன்றையும் அனுப்பி வைத்துள்ளார்.

மலையக பெருந்தோட்டப் பகுதிகளில் வாழ்பவர்கள் தேசிய அடையாள அட்டையைப் பெறுவதற்கான ஆவணங்களை சமர்ப்பிக்கும்போது தோட்ட முகாமைத்துவத்தின் கடிதத்தையும் சமர்ப்பிக்க வேண்டிய சூழ்நிலை காணப்படுகின்றது.

இந்த ஆவணத்தைத் தோட்ட நிர்வாகத்திடம் பெறுவதற்கு பெருந்தோட்ட மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டுவருவது தொடர்பில் இ.தொ.காவின் இளைஞர் அணி தலைவர் எஸ்.ரூபதர்ஷனிடம் இளைஞர்கள் பலர் முறையிட்டுள்ளனர்.

இது தொடர்பில் இளைஞர் அணி தலைவர் அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளார்.

இதனையடுத்து ஏனைய சமூகங்களுக்குபோல், விதிவிடத்தை உறுதிசெய்யும் நடவடிக்கையும் கிராம சேவகர்கள் ஊடாக முன்னெடுக்குமாறு கோரி, இது விடயத்தில் தோட்ட நிர்வாக தரப்பிடம் இருந்து ஆவணங்கள் எதுவும் பெறப்படாத வகையில் பொறிமுறையை உருவாக்குமாறு கோரி ஆட்பதிவு திணைக்கள ஆணையாளருக்கு அமைச்சரால் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

(05)

காலைக்கதிர் Kalaikkathir

# மலைபத்தாண்டு அபிவிருத்தி திட்டம் விரிவுபடுத்தப்படும்

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க உறுதி

மலைப் பத்தாண்டு பத்தாண்டு பல்நோக்கு கிராமப்புற மற்றும் சமூக அபிவிருத்தித் திட்டம் மேலும் விரிவுபடுத்தப்படும்.

களுத்துறை, கண்டி மற்றும் அம்பாறை மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட கிராம சேவகர் பிரிவுகளுக்கு மேலதிகமாக ஏனைய 84 கிராம சேவகர் பிரிவுகளிலும் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

அதற்காக 67 மில்லியன் ஷரூபா மேலதிகமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

முன்னதாக, நாட்டின் 10 மாவட்டங்களில் மலை பத்தாண்டு திட்டத்தை செயல்படுத்த முடிவு செய்யப்பட்டது. ஆனால் மக்கள் பிரதிநிதிகளிடமிருந்து ஜனாதிபதி அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற கோரிக்கைகளைக் கருத்திற் கொண்டு வேறு ஒரு மாவட்டத்தில் இந்த வேலைத்திட்டத்தை அமுல்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். அது தான் அம்பாறை மாவட்டம்.

களுத்துறை மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இதனைத் தெரிவித்தார்.

களுத்துறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு அதன் இணைத் தலைவர் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சஞ்சீவ எதிரிமான்ன தலைமையில் நடைபெற்றது.

அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பான முன்மொழிவுகளை தயாரிக்கும் போது கிராமப்புற மக்களின் தேவைகளை கவனத்தில் கொள்ள வேண்டுமென அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார்.

கடல் மட்டத்திலிருந்து 200 மீற்றருக்கும் அதிகமான உயரத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகங்கள் இத்திட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்டன. ஆனால் மக்கள் பிரதிநிதிகளின் கோரிக்கைகளைக் கருத்தில் கொண்டு களுத்துறை, கண்டி மற்றும் அம்பாறை மாவட்டங்களில் அந்த எல்லை கடல் மட்டத்திலிருந்து 150 மீற்றராக குறைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அமைச்சர் மேலும் கூறியதாவது:

மலைப் பத்தாண்டுத் திட்டத்தின் அனைத்துத் திட்டங்களும் கிராமியக் குழு மூலம் கண்டறியப்பட வேண்டும். எனவே கிராம சேவை மட்டத்தில் அந்த கிராமியக் குழுக்களை நியமிக்கவும். ஜூலை 31 ஆம் திகதிக்குள் அனைத்து அபிவிருத்தி பணிகளையும் முடிக்க வேண்டும். புதிய திட்டங்களைத் தொடங்குவதை விட, நிறுத்தப்பட்ட திட்டங்களை முடிக்க முன்னுரிமை அளிக்க வேண்டும். அந்த குழுவின் மூலம் திட்டங்களின் அனைத்து கண்காணிப்பும் செய்யப்பட வேண்டும். கிராம மட்டத்தில் திட்டங்களை அடையாளம் காண்பதில் ஏதேனும் சிக்கல் இருந்தால், அதை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவிடம் முன்வைக்கவும். அங்கு தீர்வு வழங்க முடியாவிட்டால் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவுக்கு அனுப்புங்கள். அங்கிருந்து தீர்வு கிடைக்காவிட்டால் பிரதமர் இருக்கும் தேசியக் குழுவுக்கு அனுப்புங்கள். திட்டங்களை அடையாளம் காணும் போது, அவற்றை மத்திய அரசு, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைப்புகள் என தனித்தனியாக அடையாளப்படுத்தவும். திகதிகளுடன் திட்டங்களை உருவாக்கவும். நாட்டின் நிலையைப் புரிந்து கொண்டு, நாட்டின் பொருளாதாரத்துக்கு உதவும் திட்டங்களைத் தொடங்க உழைக்க வேண்டும். - என்றும் கூறினார்.

களுத்துறை மாவட்டத்தில் பாலிந்த கண்டி, வலல்லாவிட்ட, அகலவத்தை, புளத்சிங்கள, மத்துகம மற்றும் இங்கிரிய ஆகிய 06 பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள 235 கிராம சேவகர் பிரிவுகளில் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

'மலைப் பத்தாண்டு' என்பது பத்து வருட பல்நோக்கு கிராமப்புற மற்றும் சமூக மேம்பாட்டுத் திட்டமாகும். இந்நாட்டின் மலையகப் பகுதிகளில் வாழும் மக்களின் பொது உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக இது நடைமுறைப்படுத்தப்படுகிறது. இந்த வருட வரவு செலவு திட்டத்தில் அந்த வேலைத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்தத் தொகை 10,000 மில்லியன் ஷரூபா.

கண்டி, மாத்தளை, நுவரெலியா, இரத்தினபுரி, கேகாலை, மாத்தறை, காலி, களுத்துறை, பதுளை, குருநாகல் மற்றும் அம்பாறை ஆகிய 11 மாவட்டங்களில் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

வடக்கில் கொழும்பு மாவட்டத்தையும், கிழக்கில் இரத்தினபுரி மாவட்டத்தையும், தெற்கில் காலி மாவட்டத்தையும், மேற்கில் இயற்கை எழில் கொஞ்சும் கடற்கரையையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. மேல் மாகாணத்தின் மிகப்பெரிய மாவட்டம் களுத்துறை ஆகும். பண்டைய காலங்களிலிருந்து, இந்த மாவட்டம் பொருளாதார விவகாரங்களில் முன்னணி இடத்தைப் பிடித்துள்ளது. களுத்துறை மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகப் பிரிவுகளின் மொத்த எண்ணிக்கை 14 ஆகும். இங்கு தற்போதைய மக்கள் தொகை பன்னிரெண்டு லட்சத்துக்கும் அதிகமாக உள்ளனர்.

இந்த ஆண்டு களுத்துறை மாவட்டத்திற்கான அபிவிருத்தி நிதி ஒதுக்கீடுகள் தொடர்பிலும் அமைச்சர் அதிகாரிகளிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர்களான அனுப பாஸ்குவல், பியல் நிஷாந்த, களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ரோஹித அபேகுணவர்தன, லலித் வர்னகுமார, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ. எஸ். சத்தியானந்த, மேல்மாகாண பிரதம செயலாளர் தம்மிக்க விஜயசிங்க, களுத்துறை மாவட்ட செயலாளர் பிரசன்ன ஜனக குமார உட்பட முக்கியஸ்தர்கள் மற்றும் அரச அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

(05)

# 5 மில்லியன் ரூபா செலவில் தட்டாங்குளம் புனரமைப்பு

வவுனியா - தட்டாங்குளம் 5 மில்லியன் ஷரூபா செலவில் புனரமைக்கும் வேலைத் திட்டத்தை வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவருமான கு.திலீபன் அவர்கள் ஆரம்பித்து வைத்தார்.

உலக வங்கியின் கடன் திட்டத்தின் மூலம் காலநிலை மாற்றத்தினை எதிர்கொள்வதற்கான பன்முகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வவுனியா, தட்டாங்குளம் குளத்தின் இரு மதகுகள் மற்றும் வாய்க்கால்கள் புனரமைக்கப்படவுள்ளன.

வவுனியா, தட்டாங்குளம் குளத்தில் இடம்பெற்ற புனரமைப்பு ஆரம்ப நிகழ்வில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும், அபிவிருத்திக்குழு தலைவருமான கு.திலீபன், செட்டிக்குளம் பிரதேச செயலாளர் இ.பிரதாபன், வவுனியா மற்றும் மன்னார் பிராந்திய மத்திய நீர்ப்பாசன திணைக்கள பணிப்பாளர் எம்.சற். இப்ராகிம், நீர்ப்பாசன பொறியியலாளர் கே.தினேஸ்குமார், கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் க.விமலஷரூபன் மற்றும் விவசாயிகள், கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். இதேவேளை, வவுனியா மாவட்டத்தில் பரயநாளங்குளம், தவசிகுளம், சமனங்குளம், தட்டாங்குளம், விஞ்ஞானகுளம், ஈட்டிமுறந்தகுளம் ஆகிய குளங்கள் 30 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05-100)

# இரணைமடு நன்னீர் மீன்பிடிச் சங்கத்தின் ஏற்பாட்டில் மீனவர் வாழ்வாதார மேம்பாடு

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதி

இரணைமடு நன்னீர் மீன்பிடிச் சங்கத்தின் ஏற்பாட்டில் மீனவரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் மீனவ குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் வலைகள் வழங்கிவைக்கப்பட்டதுடன் மீனவர்களுக்கான நன்னீர் மீன் விற்பனை நிலையமும் மற்றும் சிறுவர் பூங்கா மற்றும் இரணைமடு குளத்தின் மீன்வழத்தை மேம்படுத்தும் நோக்கில் மீன் குஞ்சுகள் வைப்பிலிடப்பட்டன. இந்நிகழ்வில் கடத்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் அரச உத்தியோகத்தர்கள் கிளிநொச்சி மாவட்ட நீரிய வழக்கலத்தினர் மற்றும் மீனவர்கள் என்ன பலரும் கலந்து கொண்டனர். (05-113)

# எமது பூர்வீகக் காணி எதையுமே கபளீகரம் செய்ய அனுமதியோம்

## பொத்துவில் பிரதேச செயலகம் முற்றுகை





(வி.ரி. சகாதேவராஜா)

பொத்துவில் பிரதேசத்தில் இருக்கின்ற எமது பூர்வீக காணிகளை எமது உயிர் போனாலும் யாருக்கும் விட்டுக் கொடுக்க மாட்டோம். மூவினத்துக்கும் பொதுவான பிரதேச செயலாளர் நீதியாக நடக்க வேண்டும்.

இவ்வாறு பொத்துவில் பிரதேச செயலகம் முன் முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் நடத்திய தமிழ் சிங்கள மக்கள் கூட்டாக வேண்டுகோள் விடுத்தனர்.

அங்கு அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், பொத்துவில் பிரதேச சபையின் முன்னாள் பிரதி தவிசாளர் பெருமாள் பார்த்திபன், பொத்துவில் உப விகாரதிபதி

உத்தலமட்ட ரத்னபிரிய தேரர், இலங்கை தமிழரசுக் கட்சி வாலிபர் முன்னணி துணைச்செயலாளர் அருள்.நிதாஞ்சன், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் சுபோதரன் உள்ளிட்ட குழுவினர் அங்கு சமுகளித்திருந்தனர்.

500 இற்கும் மேற்பட்ட தமிழ் சிங்கள மக்கள் அங்கு கூக்குரல் இட்டவண்ணம் குழுமியிருந்தனர்.

பிரதேச செயலாளர் ஏ.எல். பிர்னாஸ், உதவி பிரதேச செயலாளர் பி.இராமக்குட்டி மற்றும் அதிகாரிகள் வாசல் அருகே நின்று ஆர்ப்பாட்டம் நடத்திய மக்களின் பிரதிநிதிகளை மாத்திரம் உள்ளே அழைத்து கலந்துரையாடினர்.

அப்போது முன்னாள் பிரவி தவிசாளர் பெருமாள் பார்த்திபன் கூறுகையில் -

பொத்துவில் கோமாரி பிரதேசத்தில் இதுவரை செய்யப்பட்டு வந்த சேனைப் பயிர்ச்செய்கை அனைத்தும் கைவிடப்படும் நிலையில் இருக்கின்றது.

கோமாரி பிரதேசத்தில் யுத்தத்தின் போது எரிக்கப்பட்ட வீடுகளினுள் இருந்த காணி உரிமை பத்திரம் பர்மிட் அனைத்தும் எரிந்தன.

புதிய பத்திரம் வழங்குவதாக பிரதேச செயலாளர் அறிவித்தார். அதற்கமைவாக 200 - 300 பேர் விண்ணப்பித்தனர். ஆனால் இதுவரை எவருக்குமே அந்த பத்திரம் கிடைக்கவில்லை.

கனகர் கிராமம் என்பது தமிழர்களின் பூர்வீகக் கிராமம். பல வருட போராட்டத்தின் பின்பு அண்மையில் 73 பேருக்கு மாத்திரம் காணி உரிமை பத்திரம் வழங்கப்பட்டது. ஆனால் அது கல் போட்டு அதனை எல்லைப் படுத்தவில்லை. இதனால் வீதி எங்குள்ளது? காணி எங்குள்ளது என்பது தெரியாமல் மக்கள் அலைகின்றனர்.

கிணறு வெட்ட அனுமதி கேட்டால் அதனை மறுக்கிறார்கள். தடுக்கிறார்கள். அங்கு பொதுவாக குடில் அமைத்து அதில் கூட்டம் கூடினால் தடுக்கிறார்கள். எனவே அதை சீர் செய்து எஞ்சிய ஏனையவர்களுக்கும் அந்தக் காணியை வழங்க வேண்டும்.

அடுத்து பிரதானமான பிரச்சினை 2015 இல் மைதான காணிப்பிரச்சினை உருவானது.

இது காலாகாலமாக எமது ஆலயங்களுக்கு எமது முன்னோரால் அந்த வட்டி வயல் எமக்கு அளிக்கப்பட்டது. ஆனால் ஒரு சில முஸ்லிம் இளைஞர்கள் சேர்ந்து எங்களுக்கு மைதானம் வேண்டும் என்று கோஷம் இடுகின்றனர். இதை சில அரசியல்வாதிகள் பின்புலத்தில் இருந்து தூண்டுகின்றனர் . இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு பின்பிறந்த தமிழ் முஸ்லீம் இளைஞர்களைத் தூண்டுவதற்கு இதனைப் பயன்படுத்துகின்றனர்.

ஏதோ ஓர் அரசியல் சக்தி உங்களையும் நீதியாக வேலை செய்யவிடாமல் தடுக்கிறது என்று எண்ணவேண்டி இருக்கின்றது.

உங்களிடம் நீதி கேட்டு இருக்கின்றோம். உங்களிடம் காணியதிகாரம் இருக்கிறது. மூவினத்திற்கும் பொதுவான அதிகாரி நீங்கள். நீதியாக செயற்படவேண்டும். தாமதிக்காமல் எமக்கு நீதி வழங்கப் பட வேண்டும்.

இழுத்து அடிக்கப்படுகின்ற நீதி மறுக்கப்பட்ட நீதியாகும். இல்லாவிட்டால் அடுத்த கட்ட செயற்பாட்டிலா நாங்கள் இறங்க வேண்டி வரும் என்றார்.

அங்கு பொத்துவில் பிரதேச செயலாளர் பிர்னாஸ் பதிலளிக்கையில் -

நாங்கள் யாரையும் கிணறு வெட்ட வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் அவர் அந்த உரிய முறைப்படி காணி உரிமத்துடன் விண்ணப்பிக்கின்ற பொழுது அதனைப் பார்த்து நாங்கள் அதனை செய்வோம். - என்றார்.

இடையில் குறிப்பிட்ட நிதான்சன்.. ஜனவரி 12ஆம் தேதி கந்தையா கோபால் மு.ஆறுமுகம் ஆகியோர் கிணறு கட்ட விண்ணப்பித்திருந்தனர் . ஆனால் இதுவரைக்கும் அந்த விண்ணப்பத்திற்கு பதில் அளிக்கவில்லை என்று சொன்னார்.

மீண்டும் பிரதேச செயலாளர் கூறுகையில்..

கனகர்கிராம பிரச்சினை காணி ஆணையர் அனுமதி பெற்று வழங்கப்படுகிறது. இரண்டாம் கட்டமாக தற்பொழுது மாகாண காணி ஆணையாளர் அனுமதி பெற்று அதனை வழங்குவோம். யாருக்கும் அநீதி இழைக்கப்பட மாட்டாது.

வட்டிவயல் காணி 17 ஏக்கர் காணி .அதனை மைதானத்திற்கு தேவை என்று ஒரு சாரார் கேட்கின்றனர். நீங்கள் ஆலய காணி என்கிறீர்கள். இதிலே நாங்கள் மாவட்ட செயலாளருக்கு இது தொடர்பாக அறிவித்திருக்கின்றோம் .அவரது பதில் வந்ததும் அதன் படி செயற்படுவோம்.

யாருக்கும் அநீதி இழைக்கப்பட மாட்டாது. அடுத்து ஊரணி சரஸ்வதி வித்தியாலய காணி உரிய காலத்தில் வழங்கப்படும். - என்றார். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# தொடர் போராட்டத்துக்கும் நாம் தயங்கோம் தென்கிழக்கு பல்கலை ஊழியர் சங்க தலைவர்!






(கே எ ஹமீட்)

எங்களது போராட்டம் வாழ்வாதாரத்துக்கான போராட்டம். நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நிலைவரங்களின் காரணமாக எங்களது ஊழியர்கள் தங்களது வாழ்வை கொண்டுசெல்ல மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

ஒரே நிறுவனத்தில் பணியாற்றும் ஒரு தரப்பினருக்கு சம்பள அதிகரிப்பை வழங்கிவிட்டு, எங்களுக்கு வாக்குறுதி தந்து அரசு ஏமாற்றி வருகின்றது. எங்களது விடயத்தில் அரசு பாகுபாடாக நடந்துள்ளது அப்பட்டமான உண்மை. இவ்வாறான நிலை நீடிக்குமாக இருந்தால் நாங்கள் தொடர் போராட்டம் ஒன்றுக்கு செல்வதைத்தவிர வேறு வழியில்லை என்றும் தென்கிழக்கு பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் தலைவர் எம்.ரி.எம். தாஜ/டீன் தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் பல்கலைக்கழக தொழிற்சங்கங்களின் சம்மேளனம், முன்னெடுத்துள்ள தொடர்ச்சியான இரு நாள்கள் கொண்ட அடையாள வேலை நிறுத்தத்தின் இரண்டாம் நாளான வியாழக்கிழமை தென்கிழக்கு பல்கலைக்கழக ஊழியர்கள் தங்களது போராட்டத்தை சம்மாதுறையில் அமைந்துள்ள பிரயோக விஞ்ஞான பீடத்தின் நுழைவாயிலில் முன்னெடுத்தனர்.

கல்விசார ஊழியர்கள் சங்கத்தின் தலைவர் எம்.ரி.எம். தாஜ/டீனின் தலைமையிலும் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் செயலாளர் எம்.எம். முகமது காமிலின் வழிகாட்டலில் இடம்பெற்ற குறித்த அடையாள வேலை நிறுத்த போராட்டத்தின் இரண்டாம் நாளிலும் பெரும் அளவிலான ஊழியர்கள் பங்கு கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வியாழக்கிழமை இடம்பெற்ற இப்போராட்டத்தில் வாக்களிக்கப்பட்ட 107 வீத சம்பள அதிகரிப்பை வழங்கு, உறுதியளித்த 25 வீத எம்சிஎ கொடுப்பனவை வழங்கு என்பன போன்ற பல்வேறு கோரிக்கைகளுக்கு அரசாங்கம் தீர்வைத் தர வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டன.

இங்கு ஒற்றுமையே பலம், சமத்துவமே எம் தேவை, அரசாங்கமே கண்முளித்துப்பார், 8 வருட ஏமாற்றம் இன்னும் தொடருமா?, வேண்டாம் வேண்டாம் பாகுபாடு வேண்டாம், புத்திஜீவிகளை உருவாக்கும் அரச ஊழியர்களாகிய நாங்கள் நடுத்தெருவில் என்பன போன்ற கோஷங்கள் எழுப்பப்பட்டன.

(05)

## நாவிதன்வெளி மத்திய முகாமில் வாராந்த சந்தை திறந்து வைப்பு





(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மத்திய முகாம் இரண்டு கிராம சேவையாளர் பிரிவில் 1990 ஆம் ஆண்டுகளுக்கு முன்னர் இயங்கி வந்த பழைய சந்தை நீண்ட காலமாக பாவனையற்று கிடந்தது. குறித்த சந்தையை பொதுமக்கள் பயன்படுத்தி தமது பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்தக்கூடிய வகையில் நாவிதன்வெளி பிரதேச செயலகம், தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபை, சிறு கைத்தொழில் அபிவிருத்தி நிறுவனம் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி அதிகார சபை என்பன ஒன்றிணைந்து இந்த பழைய சந்தையை மீண்டும் சனிக்கிழமைகளில் இயங்கக்கூடிய புதிய வாராந்த சந்தையாக மாற்றி வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. இந்த திறப்பு விழா நிகழ்வில் நாவிதன்வெளி பிரதேச செயலாளர் ஆர். ராகுலநாயகி பிரதம அதிதியாக கலந்து கொண்டு வாராந்த சந்தையை திறந்து வைத்தார்.

இங்கு குறித்த பிரதேசத்தில் வாழும் பொதுமக்களால் உற்பத்தி செய்யப்பட்ட நஞ்சற்ற மரக்கறி , பழவகைகள் விற்பனை செய்யப்பட்டதுடன் சிறு கைத்தொழில் முயற்சியாளர்களால் உற்பத்தி செய்யப்பட்ட நெசவு உற்பத்திப் பொருள்கள், அழகு சாதன பொருள்கள், தீன் பண்டங்கள் மற்றும் கிராம மட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட உடல் ஆரோக்கி யத்திற்குத் தேவையான இதர உணவு உற்பத்தி பொருள்களும் இங்கு விற்பனை செய்யப்பட்டன. தொடர்ந்து சனிக்கிழமைகளில் இந்த வாராந்த சந்தையை திறப்பதற்கு ஏற்பாடுகள் செய்து தர வேண்டுமென வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் பிரதேச செயலாளரிடம் கோரிக்கை விடுத்தனர்.

இந்தத் திறப்பு விழா நிகழ்வில் பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி திலகராணி கிருபைராஜா, திணைக்களங்கள பொறுப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரதேச மட்டத்தில் கடமையாற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(05)

## குடிவரவு திணைக்களம்முன் கண்டியில் பெரும் பரபரப்பு

குடிவரவு குடியகழ்வு திணைக்கள கண்டி பிராந்திய காரியாலயத்தில் சேவைகளை பெற்றுக்கொள்ள வரும் மக்களுக்கு அவர்களின் வருகைக்கு ஏற்ப இலக்கங்களை வழங்குவதற்கான முறையான ஏற்பாட்டுகள் இல்லாததால் வரும் மக்கள் கடும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர்.

இந்த இடத்திலிருந்து ஒரு நாள் சேவையின் கீழ் தினமும் 200 கடவுச்சீட்டுகள் வழங்கப்படுகின்றன, ஆனால் அந்த சேவையைப் பெறுவதற்கு நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் வருகின்றனர்.

அலுவலகம் அமைந்துள்ள கண்டி - பேராதனை பிரதான வீதியில் செவ்வாய்க்கிழமை மதியம் வரிசையில் நிற்கும் மக்கள், மறுநாள் காலை 8.00 மணிக்கு அலுவலகம் திறக்கும் வரை காத்திருக்கின்றனர்.

ஒரு நாள் சேவையின் கீழ் 200 இலக்கங்களும், வழமையான சேவையின் கீழ் 175 இலக்கங்களும் வழங்கப்படுவதுடன், இந்த இலக்கங்களைப் பெறுவதற்கு கடும் போட்டி நிலவுவதால், கட்டுகெலே, சுதுஹூம்பொல பிரதேசவாசிகள் நள்ளிரவு முதல் வரிசையில் காத்திருப்பதாக தெரியவரும் அதேவேளை, சேவை பெற வரும் நபர்களிடம் 3000-5000 ஷரூபா வரையிலான தொகைகளுக்காக எண்களை விற்று மோசடி நடக்கின்றதாக தெரியவருகின்றன. இந்த மோசடிக்கு அலுவலகத்தில் உள்ள சிலரும் துணைபோவதாகச் சந்தேகம் எழுந்துள்ளதாகச் சேவைகளைப் பெற வரும் மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

சாதாரண சேவைகளின் கீழ் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பித்தால், அதைப் பெறுவதற்கு சுமார் 06 மாதங்கள் காத்திருக்க வேண்டும் என்று அந்தச் சேவையைப் பெற வந்த நபர் ஒருவர் சுட்டிக்காட்டினார்.

இலக்கங்களை வழங்குவதில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக புதன்கிழமை அந்த இடத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டதுடன் குடிவரவு குடியகழ்வு திணைக்கள கண்டி அலுவலக அதிகாரிகளின் அறிவித்தலின் பேரில் கண்டி பொலிஸ் தலைமையக பிரதான பரிசோதகர் ரசிக சம்பத் உள்ளிட்ட குழுவினர் சென்று அதைக் கட்டுப்படுத்தினர்.

கடவுச்சீட்டை பெற்றுக்கொள்வதற்காக இரவு முழுவதும் விழித்திருக்கும் மக்களுக்கு இலக்கங்களை வழங்குவதற்கான முறையான வேலைத்திட்டத்தைத் தயாரிக்குமாறு குடிவரவு குடியகழ்வு திணைக்களத்தின் கண்டி பிராந்திய அலுவலக அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் அலுவலகத்தின் பிரதிக் கட்டுப்பாட்டாளர் திருமதி பண்டார மெனிகே அறிவிக்கையில் -

இலக்கம் வழங்குவது தொடர்பில் அலுவலகத்தில் எவ்வித பிரச்சினையும் இல்லை எனவும் நுழை வாயலுக்குவெளியே குவிந்திருந்த மக்கள் வரிசையில் சிறிது நேரம் பதற்றம் நிலவுவதாகக் கூறப்படுகிறது.

நுழைவாயிலுக்கு வெளியே அமைதிக்குக் குந்தகம் ஏற்படுமிடத்து அதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ள பிரதிக் கட்டுப்பாட்டாளர், அலுவலகத்திற்குள் ஒழுங்காக நுழைபவர்களுக்கு உரிய நடவடிக்கைகளைத் திணைக்களம் மேற்கொள்ளும் எனவும் தெரிவித்துள்ளார்.

குருநாகல், மாத்தறை, கண்டி மற்றும் வவுனியா ஆகிய இடங்களில் உள்ள அலுவலகங்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்குமாறு குடிவரவு குடியகழ்வு திணைக்களத்தின் தலைமை அலுவலகம் பொலிஸாருக்கு அறிவித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இது தொடர்பான சம்பவத்தால், அலுவலக பணிகள் ஒரு மணி நேரம் தாமதமாக ஆரம்பிக்கப்பட்டன எனவும் மேற்படி பிரதிக் கட்டுப்பாட்டாளர் தினமும் வழங்கப்படும் கடவுச்சீட்டுகளின் எண்ணிக்கை முன்பு இருந்ததைப் போலவே இருக்கும் என்றும் வலியுறுத்தினார்.

கடவுச்சீட்டை பெற்றுக்கொள்வதற்காக இரவு முழுவதும் விழித்திருக்கும் மக்களுக்கு இலக்கங்களை வழங்குவதற்கான முறையான வேலைத்திட்டத்தை தயாரிக்குமாறு குடிவரவு குடியகழ்வு திணைக்களத்தின் கண்டி பிராந்திய அலுவலக அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(05)

காலைக்கதிர் Kalaikkathir

# காணாமலாக்கப்பட்டுள்ள பிள்ளைகளைத் தேடி அலையும் தாய்மார்களின் ஒட்டுமொத்த குறியீடு சாந்தனின் தாயார்

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இடித்துரைப்பு



இந்திய மற்றும் ஏனைய நாடுகளின் சிறைகளிலும் தடுப்புமுகாம்களிலும் ஆயிரக்கணகானோர் தடுத்துவைக்கப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டவர்களாக்கப்பட்டும் இருக்கையில்.... அவர்களை தேடி அலையும் எம் தேச தாய்மார்களின் அவலத்தின் ஒட்டுமொத்த குறியீடாக சாந்தனின் தாயார் இருக்கிறார் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்

சாந்தனின் மரணம் குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

33 வருடம் இந்திய மண்ணில் தனிமை சிறையில் போதிய மருத்துவ வசதிகள் இன்றி, அடைக்கப்பட்டிருந்த சாந்தனின் நீதிமன்றால் விடுவிக்கப்பட்ட பின்னரும் இந்திய சிறிலங்க அரசுகளின் மெத்தனப்போக்கால் ஒன்றரை வருடம் அடைத்துவைக்கப்பட்டிருந்த நிலையில் காலமானார் எனும் செய்தி எம்மக்கள் அனைவரையும் தாங்கொணா துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

33 வருடங்களுக்குப் பின்னர் தன் மகனின் முகத்தைக் காணும் ஏக்கத்தில் காத்திருந்த அவரின் தாயார் மற்றும் குடும்பத்தவர்களின் துயரை எந்த வார்த்தைகளும் ஆற்றுப்படுத்தப்போவதில்லை.

அவரின் குடும்பத்தினரின் துயரில் நாமும் இணைந்துகொள்கிறோம்.

கொடிய இன அழிப்புபோரால் சிறிலங்கா இந்திய மற்றும் ஏனைய நாடுகளின் சிறைகளிலும் தடுப்பு முகாம்களிலும் ஆயிரக்கணக்கானோர் தடுத்துவைக்கப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டவர்களாக்கப்பட்டும் இருக்கையில், அவர்களைத் தேடி அலையும் எம் தேச தாய்மார்களின் அவலத்தின் ஒட்டுமொத்த குறியீடாக சாந்தனின் தாயார் இன்று இருக்கிறார்.

இனியாவது தடுத்துவைக்கப்பட்டவர்களினதும் காணாமல் ஆக்கப்பட்டவர்களினதும் விடுதலைகள் துரிதப்படுத்தப்படவேண்டும். தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதியே. (05)

# சிறுவர் துஸ்பிரயோகம் தொடர்பில் ஹோமாஹமவில் தேரர் ஒருவர் கைது

இரண்டு சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் தேரர் ஒருவர் ஹோமாகம தலைமையக பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மந்திரங்கள் மூலம் நோய்களைக் குணப்படுத்துவதாக கூறப்படும் தேரர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் 13 வயதுடைய இரட்டை சிறுவர்களாவர்.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் இந்த இரு சிறுவர்களில் ஒருவர் சுகவீனமடைந்துள்ள நிலையில் அவர்களது பெற்றோர் அந்த சிறுவனை வைத்தியத்துக்காக குறித்த தேரரிடம் அழைத்துச் சென்றுள்ளனர்.

சுகவீனமடைந்துள்ள சிறுவனை குணப்படுத்த விசேட பூஜைகள் நடத்த வேண்டும் எனக் கூறிய தேரர் சிறுவனை தன்னுடன் தங்க வைத்துக் கொண்டுள்ளார்.

இந்நிலையில் இரட்டை சிறுவர்களில் மற்றைய சிறுவனும் சுகவீனமடைந்துள்ள நிலையில் குறித்த தேரர் சிறுவனின் வீட்டுக்குச் சென்று அந்த சிறுவனையும் தன்னுடன் காரில் அழைத்துச் சென்றுள்ளார்.

இதன்போது இந்த தேரர் இந்த இரட்டை சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதனையடுத்து சந்தேக நபர் ஹோமாகம நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் 5 லட்சம் ஷரூபா சரீர பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட சிறுவர்கள் இருவரும் பரிசோதனைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (05)

# மொனராகலையில் பஸ் கோரவிபத்து: சிறுவர்கள் உள்ளிட்ட 36 பேர் காயம்



மொனராகலையில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 36 பேர் காயமடைந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்துச் சம்பவம் வியாழக்கிழமை காலை இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இலங்கை போக்குவரத்து சபைகுச் சொந்தமான பஸ் ஒன்றே புத்தம பகுதியில் இருந்து மொனராகலை நோக்கி பயணித்த போது விபத்திற்குள்ளாகியுள்ளது.

விபத்தில் சிறுவர்கள் உட்பட 36 பேர் காயமடைந்துள்ள நிலையில், அவர்கள் சியம்பலாண்டுவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மொனராகலை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (05)

# கிரேட்வெஸ்டன் பகுதியில் நீர்த்தேக்கம் அமைப்பதற்கு எதிராக ஆர்ப்பாட்டம்

நுவரெலியா மாவட்டம் கொட்கலை பிரதேச சபைக்கு உட்பட்ட தலவாக்கலை கிரேட்வெஸ்டன் பகுதியில் நீர்த்தேக்கம் அமைப்பதுக்கு எதிராக கிரேட்வேஸ்டன் தோட்ட மக்களால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று நேற்று (வியாழக்கிழமை) முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கல்கந்த வத்த காட்டுமாரியம்மன் ஆலய வளாகத்திலிருந்து ஊற்றெடுக்கும் ஆற்றிலிருந்து வரும் நீரை லூசா,கல்கந்தை,ஸ்கல்பா மலைதோட்டம் ஆகிய பகுதி மக்கள் உபயோகப்படுத்தியிருந்த நிலையில் தலவாக்கலை பகுதிகளுக்கு நீரை மாற்றி அனுப்ப நீர்வழங்கள் அமைச்சின் ஊடாக செயற்பாடுகள் முன்னெடுத்து வருவதாக கூறியே குறித்த ஆர்ப்பாட்டத்தை தோட்ட மக்கள் முன்னெடுத்துள்ளனர்.

இப்பிரச்சனைக்கு தீர்வு கிடைக்காவிட்டால் மிகப்பெரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுப்பதாக கிரேட்வெஸ்டன் பகுதி மக்கள் குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(05)

# மனைவி தாக்கிக் கொல்லப்பட்டு 10 மாதங்களின் பின் கணவன் கைது

தனது மனைவியைப் பலமாகத் தாக்கிக் காயப்படுத்தி , விபத்தில் காயமடைந்ததாகக் கூறி வைத்தியசாலையில் சேர்த்ததாகக் கூறப்படும் கணவர் களுத்துறை குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் பதுரலிய பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடையவராவார்.

30 வயதுடைய ஒரு பிள்ளையின் தாயான தனது மனைவி ஓட்டோவில் இருந்து வீழ்ந்து காயமடைந்துள்ளார் எனக் கூறி இவர் கடந்த 2023ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பதுரலிய வைத்தியசாலையில் சேர்த்துள்ளார்.

காயமடைந்தவர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் கடந்த 2023 ஆம் ஆண்டு மே மாதம் 7 ஆம் திகதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவரது மரணம் தொடர்பில் சந்தேகிப்பதாக உயிரிழந்தவரது குடும்பத்தினர் அளித்த முறைப்பாடுக்கமைய விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார் 10 மாதங்களுக்கு பின்னர் சந்தேக நபரான கணவரை கைது செய்துள்ளனர்.

(05)

# சதுப்பு நிலங்களை மறுசீரமைப்பதில் இலங்கையே உலகளவில் முன்னணி

ஐக்கிய நாடுகளின் சுற்றாடல் பேரவையின் ஆறாவது அமர்வில் (ருநேயு-6), சதுப்பு நிலங்களை மறுசீரமைப்பதில் உலகளாவிய ரீதியில் இலங்கை முன்னணி நாடாக அங்கீகரிக்கப்பட்டது.

கென்யாவின் நைரோப் நகரில் அமைந்திருக்கும் ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் வேலைத்திட்டத்தின் (UNEP) தலைமையகத்தில் நடைபெற்ற இந்த மாநாட்டில், இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி, காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவான் விஜயவர்தன கலந்துகொண்டார்.

இதன்போது இலங்கைக்கான விருதை சுற்றாடல் அமைச்சின் செயலாளர் கலாநிதி அனில் ஜாசிங்க பெற்றுக்கொண்டார்.

காலநிலை மாற்றம், உயிரியல் பல்வகைத்தன்மை இழப்பு மற்றும் சுற்றாடல் மாசு ஆகிய மூன்று நெருக்கடிகளுக்கும் தீர்வு காண்பதற்கான உலகளாவிய ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில் ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றாடல் அமைப்பின் ஆறாவது அமர்வு நடைபெற்றது.

அமர்வை உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கும் முகமாக நிரந்தர பிரதிநிதிகளின் திறந்த குழு கூட்டம் நடைபெற்றிருந்த நிலையில், இதன்போது சதுப்புநில மறுசீரமைப்பு முயற்சிகளில் இலங்கையை உலகளாவிய முன்மாதிரியாக எடுத்துக்கொள்ள முடியும் என சுட்டிக்காட்டப்பட்டது.

எதிர்கால சந்ததிக்காக நிலையான அபிவிருத்தி இலக்குகளை முன்னோக்கி கொண்டுசெல்வது தொடர்பிலான ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் மாநாட்டின் ஆறாவது அமர்வு, உலகளாவிய சுற்றுச்சூழல் தொடர்பில் முடிவெடுப்பதில் முன்னணியில் உள்ளதோடு மனித குலத்துக்கும் இயற்கைக்கும் இடையே ஒரு புதிய உறவை உருவாக்குவதற்கும் பங்களிக்கிறது.

சுற்றுச்சூழல் பிரச்சினைகளுக்காக அர்ப்பணிக்கும் ஒரே உலகளாவிய உறுப்பினர் மன்றமாக, ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் பேரவையானது, சுற்றுச்சூழல் தொடர்பிலான கூட்டுப் பொறுப்பை நோக்கமாகக் கொண்ட முக்கியமான முன்முயற்சிகள் மற்றும் புத்தாக்க செயற்பாடுகளுக்கான தனித்துவமான களமாகவும் விளங்குகிறது.

அரச நிறுவனங்கள், சிவில் அமைப்புக்கள், ஆய்வாளர்கள் மற்றும் விஞ்ஞானிகள் பங்குபற்றுதலுடன் நடைபெறும் இந்த மாநாடு சுற்றாடல் கொள்கை வகுப்புக்கும் களம் அமைத்துக் கொடுக்கிறது.

# முஷாரப்பை கட்சியில் இருந்து நீக்கியமை சட்டத்துக்கு முரண்

## உயர் நீதிமன்றம் தீர்ப்பு



அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷா ரப்பை கட்சியில் இருந்து நீக்கியமை சட்டத்துக்கு முரணானது என உயர் நீதிமன்றம் நேற்று (வியாழக்கிழமை) தீர்ப்பளித்தது.

கட்சியில் இருந்து நீக்கப்பட்டதற்கு எதிராக நாடாளுமன்ற உறுப்பினர் முஷாரப் தாக்கல் செய்த மனு மீதான தீர்ப்பை வழங்கிய பிரியந்த ஜயவர்தன தலைமையிலான மூவரடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு இந்த முடிவை அறிவித்துள்ளது.

(05)

# குருந்தூர் மலை வழக்கு மீண்டும் ஒத்திவைப்பு

குருந்தூர் மலை தொடர்பான வழக்கொன்று நேற்று முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, இந்த வழக்கு எதிர்வரும் ஜூலை 25ஆம் திகதிக்கு மீண்டும் தவணையிடப்பட்டது.

B1053 / 2022 என்ற இலக்கமுடைய வழக்கு தொடர்ச்சியாகதவணைகள் வழங்கப்பட்டு இடம்பெற்று வந்த நிலையில், இன்று மீண்டும் வழக்கு விசாரணைகள் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் இடம்பெற்றது.

இதன்போது, முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் சமூக செயற்பாட்டாளர் இரத்தினராசா மயூரன் ஆகியோர் நீதிமன்றில் முன்னிலையாகினர்.

'நீதிமன்ற தீர்ப்புகள் மதிக்கப்பட வேண்டும்', 'சைவ வழிபாடுகளை மேற்கொள்ள எந்தவித இடையூறுகளும் விளைவிக்கக் கூடாது', 'குருந்தூர் மலையை அண்டிய பகுதிகளில் நில அபகரிப்பு தடுக்கப்பட வேண்டும்' என வலியுறுத்தி தண்ணிமுறிப்பு மற்றும் குமுழமுனை பகுதி மக்களால் கடந்த 2022 செப்டெம்பர் 21ஆம் திகதி குருந்தூர் மலையில் பாரிய ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அந்த ஆர்ப்பாட்டத்தில் மக்களோடு கலந்துகொண்ட முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் சமூக செயற்பாட்டாளர் இரத்தினராசா மயூரன் ஆகியோரை விசாரணைக்காக முல்லைத்தீவு பொலிஸார், பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு அழைப்பு விடுத்திருந்தனர்.

அதையடுத்து, பொலிஸ் நிலையம் சென்ற இருவரையும் பொலிஸார் கைது செய்திருந்தனர்.

இதுதொடர்பானவழக்கே இன்று நீதி மன்றத்தில் விசாரிக் கப்பட்டது.

மேலும் இந்த விவகாரத்தில் சந்தேக நபர்களாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் சி.லோகேஸ்வரன் ஆகி யோர் அடுத்த வழக்கு தவணையில் நீதிமன்றில் முன்னிலையாக வேண்டுமெனவும் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.03.2024இல் வெளியிடப்பெற்றது.